Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

SATURDAY, JULY 16, 2022

சனிக்கிழமை ஜூலை 16, 2022 | ஒளி: 08 கதிர்: 050 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் சத்தியப்பிரமாணம்

# ‘ஆசனம்’ இல்லாமலே சிம்மாசனம் ஏறினார்



முழுச் செய்தி P3

**முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர் 10 வருடங்களும் சந்திரிக்கா 11 வருடங்களும் மஹிந்த 9 வருடங்களும் ஆட்சி புரிந்தனர். எனினும், இறுதியாக ஜனாதிபதி கோட்டாபய 2 வருடங்கள் மட்டுமே ஆட்சியில் இருந்தார்**

**இரண்டு ஜனாதிபதி தேர்தலிகளிலும் தான் போட்டியிடாது பொது வேட்பாளரை களமிறங்கினார். மஹிந்தலை எதிர்த்து 2010 ஆம் ஆண்டு, சரத் பொன்சேகாவையும் 2015 ஆம் ஆண்டு மஹிந்தலை எதிர்த்து, மைத்திரிபால சிறிசேனவையும் களமிறக்கினார்**

# பிரதமர் யார்?

## சூடு பிடிக்கிறது பேரப்பேச்சுகள்

பிரதமர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவை நியமிக்க பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் தினேஷ் குணவர்தன களமிறக்கப்பட வாய்ப்புகள் இருப்பதாகவும், அவருக்கான ஆதரவை பெற்றுக்கொள்ள பல்வேறு தரப்பிடம் பேரம்பேசப்பட்டு வருவதாகவும் அரசியல் வட்டாரங்களில் தெரிய வருகின்றது.

தொடர்ச்சி P2

# மொட்டுக்குள் ரணில் அலை

## ஜனாதிபதி வேட்பாளராக பரிந்துரைக்க ஆராய்வு

**ஆர்.யசி**

இலங்கையின் நிகழ்ந்துகொண்டுள்ள அரசியல் மாற்றங்களில் அடுத்த ஏழு நாள்களுக்குள் புதிய ஜனாதிபதியை நியமிக்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ள நிலையில், தற்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே ஜனாதிபதி வேட்பாளராக பரிந்துரைப்பது ஆரோக்கியமானது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனராம்.

தொடர்ச்சி P2

# ‘அதிமேதகு’ இரத்தானது; ஜனாதிபதி கொடி நீக்கம்

- பதில் ஜனாதிபதி ரணில் அதிரடி அறிவிப்பு
- புதிய ஜனாதிபதி தெரிவுக்கு பூரண ஒத்துழைப்பு
- எம்.பிக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன்
- அரசியலமைப்புக்கு எதிராக செயற்படமாட்டேன்
- தீ வைப்பு சம்பவங்களில் ஈடுபட வாய்ப்புண்டு



மக்கள் அரசியலில் பாரிய வித்தியாசத்தை எதிர்பார்ப்பதாகவும் அதற்கு தன்னால் இயலுமான விடயங்களை செய்வதாகவும் தெரிவித்துள்ள பதில் ஜனாதிபதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி அதிமேதகு

தொடர்ச்சி P2

# ரஷ்ய விமானத்துக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

நெருக்கடியான காலத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த ரஷ்யாவின் ஏரோபுளொட் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்றுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை தள்ளுபடி செய்து கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் நேற்று (15) உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கில் 2 ஆம் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள விமான நிலையம் மற்றும் சிவில் விமான சேவைகள் நிறுவனம் சார்பில் நகர்த்தல் பத்திரம் ஒன்றினை முன்வைத்து சட்ட மா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர்

தொடர்ச்சி P2

# ருவான் வருகிறார்?

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் தேசிய பட்டியல் உறுப்பினருமான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற ஆசன வெற்றிடத்திற்கு அக்கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜயவர்தன அல்லது வஜிர அபேவர்தன ஆகிய இருவரில் ஒருவரின் பெயர் பரிந்துரைக்கப்படலாம் என கட்சி வட்டாரங்களில் தெரிந்துகொள்ள முடிகின்றது.

கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜயவர்தனவை ரணில் விக்கிரமசிங்கவின் ஆசனத்துக்கு நியமிக்க கட்சிக்குள் பெரும்பாலானோரின் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும், அது குறித்து கட்சியின் செயற்குழுவில் கூடி ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிய வருவதுடன்,



தொடர்ச்சி P2




# ஏழு நாள்களுக்குள் கடமையை முடிப்பேன்

## சபாநாயகர் அறிவித்தார்; கேள்விகள் கேட்கத் தடை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாக் கடிதம் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அடுத்த ஏழு நாள்களுக்குள் புதிய ஜனாதிபதியை நியமிக்கும் வரை ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமர், பதில் ஜனாதிபதியாக கடமையாற்றுவர் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2





# இ.தொ.கா உறுப்பினர் பெரும் அட்டகாசம்

## சிலிண்டர்களை பந்தாடி, போத்தலால் குத்த முயற்சி

**செ.பெருமாள்**

நோர்வூட் பிரதேச சபையின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா) உறுப்பினர் சூசை எலக்ஸாண்டர், நோர்வூட் நகரிலுள்ள லிட்ரோ எரிவாயு விற்பனை முகவர் நிலையத்துக்கு முன்பாக, வைக்கப்பட்டிருந்த வெற்று சிலிண்டர்களை எட்டி உதைத்து, தட்டிக்கேட்ட நபரை எச்சரித்து,

தொடர்ச்சி P2

# இன்று சபையமர்வு

## 19 வேட்புமனு; 20 வாக்கெடுப்பு

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், இன்று (16) சனிக்கிழமை விசேட அமர்வாக கூடப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் கட்சித் தலைவர்களின் நேற்றைய (15) கூட்டத்தில் எட்டப்பட்டுள்ளது.

இந்த அமர்வில், ஜனாதிபதி பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடம் குறித்து அறிவிக்கப்படும். அத்துடன்,

தொடர்ச்சி P2

இலங்கையின் அரசியல் நிலைமைகள்

# ஸ்திரமடைந்த பின்னரே பேச்சு

இலங்கையின் அரசியல் மற்றும் சமூக நிலைமைகள் குறித்து சர்வதேச நாணய நிதியம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டுள்ளது. விரைவில் பிரச்சினை தீர்க்கப்படுமென நம்பிக்கை கொள்வதாக தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஜெரி ரைஸ்,



தொடர்ச்சி P2

# சட்ட ஆட்சியை உறுதிசெய்க



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவை அடுத்து இலங்கையின் நெருக்கடி நிலைமையை தீர்க்க அமெரிக்கா தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்கும் எனவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட சகல தரப்புகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# வெளிநாடுகளுக்கான அஞ்சல் முடங்கியது

சர்வதேச நாடுகளுக்கு தபால் மூலமாக பொருட்களை அனுப்பும் செயற்பாடுகளை மறுஅறிவித்தல் வரையில் இடை நிறுத்த தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும், பல்வேறு நாடுகளுக்கான விமான சேவைகளை இலங்கை இடை நிறுத்தியுள்ள

தொடர்ச்சி P2





# மஹிந்தவும் பசிலும் வெளிநாடு செல்லத் தடை

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் உயர் நீதிமன்றத்தின் அனுமதியின்றி வெளிநாடு செல்லத் தடை விதித்து உயர் நீதிமன்றம் நேற்று (15) உத்தரவிட்டது.

இந்தத் தடை உத்தரவு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை அமலாகும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, எல்.ரி.பி தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாமால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தவணை பிந்தியது

சகல அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரசாங்க அனுமதி பெற்ற பாடசாலைகள் அனைத்துக்கும் ஜூலை 18 ஆம் திகதி முதல் 20 வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என அறிவித்துள்ள கல்வியமைச்சு, பாடசாலை புதிய தவணை வியாழக்கிழமை (21) ஆரம்பமாகும் என்றும் அறிவித்துள்ளது.

அதேபோல் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக பரீட்சை பெறுபேறுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், அதிகாரிகள் அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# ருவான் வருகிறார்?

**பிரதமர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளமையால், அவரது பாராளுமன்ற ஆசன வெற்றிடத்துக்கு, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இருவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.**

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ரணில் பதில் ஜனாதிபதியான பின்னர் பாராளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற ஆசன வெற்றிடத்தை அவ்வாறே வைத்திருக்க வேண்டும் என்றால் அதற்கும் கட்சி இணங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# சட்ட ஆட்சியை உறுதிசெய்க

இலங்கையில் ஏற்பட்டுள்ள அதிரடி அரசியல் மாற்றங்களை அடுத்து, அமெரிக்க தூதுவர் இதனை தெரிவித்துள்ளார். கோட்டாபய ராஜபக்ஷ

இராஜினாமா செய்துள்ளார்,இப்போது சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படுவதை உறுதிசெய்து அதன் மூலமாக பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்துகிறோம். அத்துடன் இலங்கை மக்களின் அபிலாஷைகளை வெற்றிகொள்ள அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளுக்கான அஞ்சல் முடங்கியது

காரணத்திற்காகவும் இவ்வாறு அஞ்சல் சேவையை தாம் தற்காலிகமாக இடை நிறுத்துவதாக திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வாறு இடை நிறுத்தப்பட்டுள்ள நாடுகளில் அமெரிக்கா , கனடா, ரஷ்யா, நெதர்லாந்து, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய கண்டத்தின் பல நாடுகள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏழு நாட்களுக்குள் கடமையை முடிப்பேன்

சபாநாயகரின் உத்தியோகபூர்வ அறிவிப்பை நேற்று (15) வெளியிடும் போதே இதனை தெரிவித்தார். அவரது அறிவிப்பில் மேலும் தெரிவிக்கையில், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 38.1 (ஆ) பிரிவுக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இராஜினாமா கடிதம் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, 2022 ஜூலை 14 ஆம் திகதி முதல் ஜனாதிபதி தனது பதவியிலிருந்து உத்தியோகபூர்வமாக இராஜினாமா செய்துள்ளார்.

அதற்கமைய தற்பொழுது முதல் புதிய ஜனாதிபதியை நியமிக்கும் அரசியலமைப்பு செயன்முறை நடைமுறைக்கு வரும். அந்த செயன்முறை நிறைவுறும் வரை ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமர் நடவடிக்கை எடுப்பார்.

என்னால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது போன்று, புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது இடம்பெறும். இந்த செயன்முறையை மிகவிரைவில் வெற்றிகரமாக நிறைவேற்றுவது எனது நோக்கமாகும். தெற்காசியாவின் பழைமையான ஜனநாயக நாடாக பெருமைப்படும் எமது நாட்டில் இந்த செயன்முறை முழுமையான ஜனநாயகக் கட்டமைப்பிலும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வது எமது நாட்டுக்கு மாத்திரமல்லாமல் உலக அரசியல் வரலாற்றிலும் முக்கியமான வரலாற்று நிகழ்வாக அமையும்.

அதனால், இந்த ஜனநாயக செயற்பாட்டுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு அனைத்துக் கட்சித் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# இ.தொ.கா உறுப்பினர் பெரும் அட்டகாசம்

அவரை போத்தலால் குத்துவதற்கு முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

மக்கள் வரிசையில் காத்திருக்க, தனியொரு சிலிண்டரை தூக்கிச் சென்ற சூசை எலக்ஸாண்டர், வரிசையில் முதலாவதாக தன்னுடைய சிலிண்டரை வைத்துள்ளார்.

இதன்போது வரிசையில் நின்றிருந்தவர்களில் ஒருவர், நாங்கள் நீண்டநேரமாக வரிசையில் காத்திருக்கின்றோம். நீங்கள் மட்டும் இவ்வாறு செய்வது நியாயமா? எனக் கேட்டுள்ளார். இதனையடுத்தே, அந்த நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட எலக்சாண்டர், இவ்வாறு அட்டகாசம் புரிந்துள்ளார்.

இதுதொடர்பில், இ.தொ.காவின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பியின் கவனத்துக்குக் கொண்டுச் செல்லப்பட்டது.

“நோர்வூட் பிரதேச சபையின் உறுப்பினர் சூசை எலக்ஸாண்டர் மீதான சர்ச்சைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், காங்கிரஸின் உயர்மட்ட ஒழுக்காற்று குழு, எதிர்வரும் 21ஆம் திகதி (வியாழக்கிழமை) உரிய விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதுபோன்ற செயல்களுக்கு இ.தொ.கா ஒருபொழுதும் அனுமதியளிக்காது என்பதோடு குறித்த பிரதேச சபை உறுப்பினரின் சகல கட்சி உறுப்புரிமைகளும் உடன் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை தெரிவித்துக்கொள்கிறேன் என ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# மொட்டுக்குள் ரணில் அலை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையிலேயே கடந்த சில தினங்களாக பொதுஜன முன்னணியினர் தமது அடுத்தக்கட்ட அரசியல் நகர்வுகள் குறித்து தீவிரமாக ஆராய ஆரம்பித்திருந்தனர். இந்நிலையில், அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க டலஸ் அழகப்பெருமவின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட போதிலும்,அவரை ஜனாதிபதி வேட்பாளராக பரிந்துரைக்க ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஒரு தரப்பினர் இணக்கம் தெரிவிக்கவில்லை என தெரிய வருகின்றது.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தால் நாட்டின் தற்போதைய நெருக்கடியை சமாளிக்க முடியும் எனவும், அவரால் அடுத்தகட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக கூறப்படுகின்றது. நாமல் ராஜபக்ஷவும் அதே யோசனையை முன்வைத்துள்ளாராம்.

அதேபோல் மிக நெருக்கடியான தற்போதைய நிலைமையில் நாட்டையும் அரசியலையும் சரியாக கையாள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இப்போது சிரேஷ்ட, அனுபவம் உள்ள தலைவர் ஒருவரின் கைகளில் ஆட்சியை கொடுத்தால் மட்டுமே மீள முடியும். இல்லையேல் ஒட்டுமொத்த நாடும் வீழ்ச்சி காணும். எனவே ரணில் விக்கிரமசிங்கவின் கைகளில் நாட்டை கொடுத்து அவரது அனுபவத்துடன் அடுத்தக்கட்ட நகர்வுகளை முன்னெடுப்பதே சரியானது. இப்போது ரணிலை விட்டால் மாற்று தெரிவு இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறு இருப்பினும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பெரும்பான்மையான ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்ற போதிலும் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 40 உறுப்பினர்களின் ஆதரவு இன்னமும் ரணிலுக்கு கிடைக்கவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது.

# ‘அதிமேதகு’ இரத்தானது: ஜனாதிபதி கொடி நீக்கம்

என்று விளிப்பதை இரத்துச் செய்தததுடன், ஜனாதிபதிக்கென இருக்கும் கொடியையும் நீக்குவதாகவும், தேசத்துக்கான ஒரேயொரு கொடி, தேசியக் கொடி என்றும் அறிவித்தார்.

பதில் ஜனாதிபதியாக, பிரதம நீதியரசர் ஜயத் ஜயசூரிய முன்னிலையில், நேற்று (15) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர், நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறுகிய காலத்துக்கு தான் பதில் ஜனாதிபதியாக பதவி வகிக்க உள்ளதாக தெரிவித்தத அவர், அடுத்த வாரத்தில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அதற்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

அரசியலில் பாரிய வித்தியாசத்தை மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்கு தன்னால் இயலுமான விடயங்களை செய்வேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை புதிய ஜனாதிபதியின் பொருட்டு தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் பதில் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டில் சட்டம் மற்றும் அமைதியை நிலைநாட்டும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அறவழிப்போராட்டங்களை முன்னெடுக்க மக்களுக்கு உரிமை உள்ளதாகவும் தெரிவித்தார். இந்நிலையில், புதிய ஜனாதிபதி தெரிவின் போது சிலர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுக்க முனைவதாகவும் இதனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முழுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பாசிசவாத முறையில் சிலர் தீ வைப்பு சம்பவங்களில் ஈடுபட வாய்ப்பிருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இரண்டு துப்பாக்கிகளும் குண்டுகளும் காணாமற்போயுள்ளதை சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு தரப்பினர் 24 பேர் காயமடைந்திருப்பதை நினைவுகூர்ந்த அவர், உண்மையான அறவழிப்போராட்டக்காரர்கள் அவ்வாறான வன்முறை செயற்பாடுகளில் ஈடுபட மாட்டார்கள் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

கிளர்ச்சிக்காரர்களுக்கும் அறவழிப் போராட்டக்காரர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாகவும் கிளர்ச்சிகளில் ஈடுபடுகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும், அரசியலமைப்புக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் எடுக்க மாட்டேன் என உறுதியளித்தார்.

சட்டம் ஒழுங்கு சீர்குலையும் பட்சத்தில், அது நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இதனால் எரிபொருள், மின்சாரம், நீர் விநியோகம், உணவுப் பொருட்கள் விநியோகம் ஆகியவற்றுக்கு தடை ஏற்படக்கூடும் எனும் அபாய நிலையை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்றார்.

சட்டம், ஒழுங்கை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு படைகளின் பிரதானி, பொலிஸ்மா அதிபர், முப்படைத் தளபதிகள் அடங்கலாக விசேட குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் எவ்வித அரசியல் தலையீடும் இன்றி சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை கடந்த வாரம் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது அறிவித்திருந்ததாகக் கூறிய ரணில் விக்ரமசிங்க, அது குறித்து பொது நிலைப்பாடுக்கு வருமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்களிடமும் கோரிக்கை விடுத்தார்.

பதில் ஜனாதிபதியாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இரண்டு தீர்மானங்களை எடுத்துள்ளதாகக் கூறிய அவர், அதிமேதகு என ஜனாதிபதியை விளித்து அழைக்கும் சொற்பதத்தை இன்றிலிருந்து உத்தியோகபூர்வமாக இரத்து செய்வதாகவும் ஜனாதிபதிக்கென்று இருக்கும் கொடியை நீக்குவதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் தேசத்திற்கு ஒரே ஒரு கொடி மாத்திரமே இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்திக் கூறினார்.

முழு நாடும் புதிய பயணத்தை மேற்கொள்வதற்கான பின்புலம் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய பதில் ஜனாதிபதி, ஊழலற்ற அமைதியான, வளமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு தேவையான சந்தர்ப்பம் மிக விரிவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

# பிரதமர் யார்?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள நிலையில் புதிய பிரதமர் ஒருவரை நியமிக்க சகல கட்சிகளும் மும்முரமாக ஆராய்ந்து வருகின்றனர். இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் பங்காளிக்கட்சிகள், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அவர்களின் ஆதரவு சஜித்திற்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் எதிர்க்கட்சி தலைவருக்கு தமது ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளதாக கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார்.

எனினும் மக்கள் விடுதலை முன்னணி, சம்பிக்க ரணவக்க எம்.பி, விமல் வீரவன்ச தரப்பினர் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவை இன்னமும் வழங்கவில்லை.

இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் சபை முதல்வர் தினேஷ் குணவர்தனவின் பெயரை பரிந்துரைக்க கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்டால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவு கிடைக்கும் என பரவலாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் யாரை பிரதமராக அமரவைப்பது, அதற்கான ஆதரவை எவ்வாறு தக்கவைப்பது என்பது குறித்த தற்போது கட்சிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் முக்கிய தரப்பிடம் பேரம்பேசப்படுவதாகவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

# ரஷ்ய விமானத்துக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவர்தன வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டார். ஜூன் 28 ஆம் திகதிய வழக்கே, நகர்த்தல் பத்திரத்தின் ஊடாக விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

முன்வைத்த வாதங்களை ஏற்றுக்கொண்டு நீதிமன்றம் வழக்கை இவ்வாறு தள்ளுபடி செய்தது இதற்கான உத்தரவை . கொழும்பு வணிக மேல் நீதிமன்ற நீதிபதி சுமித் பெரேரா பிறப்பித்தார். இந்த நிலையில், கட்டணங்களுடன் வழக்கை தள்ளுபடி செய்வதாக அறிவித்தார்.

இவ்வழக்கு வணிக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்க முன்னிலையிலேயே ஆரம்பத்தில்விசாரிக்கப்பட்ட நிலையில், கடந்த தவணையும் நேற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி சுமித் பெரேரா முன்னிலையில் அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

# இன்று சபையமர்வு

ஏற்கெனவே தீர்மானித்ததன் பிரகாரம் எதிர்வரும் 19ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு, 20ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

கட்சித் தலைவர்களால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய எதிர்வரும் 20ஆம் திகதி புதிய ஜனாதிபதி பாராளுமன்றத்தின் ஊடாகத் தெரிவுசெய்வது இடம்பெறும். இதனை, நேற்று (15) நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்புமனுக்கள் கோரப்படும் எனவும், அதன் பின்னர் 20ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவார் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார். ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் சட்ட விதிகளுக்கு அமைவாக எந்தவொரு தடையுமின்றி இந்த நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4வது சரத்துக்கு அமைய பாராளுமன்றம் இன்று (16) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்குக் கூடவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்.

1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04வது சரத்துக்கு அமைய ஜனாதிபதி பதவியில் வெற்றிடம் ஏற்பட்டு மூன்று நாட்களுக்குள் பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.

இதற்கமைய குறித்த சட்டத்தின் 05வது சரத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவியில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடம் குறித்து செயலாளர் நாயகம் இன்று (16) பாராளுமன்றத்தில் அறிவிக்கவுள்ளார்.

# ஸ்திரமடைந்த பின்னரே பேச்சு

உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க எண்ணியுள்ளதாகவும், இலங்கையின் அரசியல் நிலைமைகள் ஸ்திரமடைந்த பின்னர் மீண்டும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது இடம்பெற்றுக்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்து நாம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டுள்ளோம். இலங்கையில் கஷ்டப்படும், வறுமைக்கு முகங்கொடுத்துவரும் மக்களின் நிலைமைகளையும் அவதானித்து வருகின்றோம். அத்துடன் இலங்கையின் அரசியல் நகர்வுகளையும், சமூக அபிவிருத்தி குறித்தும் உன்னிப்பாக கண்காணித்துக்கொண்டுள்ளோம் என்றார்.

மேலும், இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும், அதன் பின்னர் மீண்டும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியும் எனவும் எதிர்பார்க்கின்றோம். கடந்த மாதமளவில் இலங்கையின் பொருளாதார மீள் கட்டமைப்பு குறித்த கலந்துரையாடல்களை ஏற்கெனவே முன்னெடுத்தோம். ஆனால் இன்னமும் வேலைத்திட்டம் ஒற்றினை ஆரம்பிக்கவில்லை. ஆனால் அவ்வாறான வேலைத்திட்டம் ஒன்றினை முன்னெடுப்பது குறித்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய தரப்புடன் எமது தொழிநுட்ப குழு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக நிதி அமைச்சு மற்றும் இலங்கையின் மத்திய வங்கி ஆகியவற்றுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உயர் மட்டத்திலான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது, அதற்கான சூழ்நிலைகள் உருவாகும் என நம்புகின்றோம் என்றார்.

அதன் பின்னர் அடுத்தகட்ட உரையாடல்களை தொடங்க முடியுமென நினைக்கின்றோம். இலங்கையின் அரசியல் நிலைமைகள் ஸ்திரமடைந்த பின்னர் மீண்டும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படும் என்பதே எமது நம்பிக்கையாகும். இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நிலைமை சீராக இல்லை எனவும் இந்த நிலையில் அது குறித்து உறுதிப்பாடு அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.



### ஜனாதிபதி பதவி வெற்றிடமானால்

# என்ன நடக்கும்

1981 ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் முறைமை பற்றி பாராளுமன்ற தொடர்பாடல் அலுவலகம் விளக்கமொன்றை அளித்துள்ளது.

அரசியலமைப்பின் 38வது சரத்தின் (1) உப சரத்துக்கு அமைய ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பின் 40வது சரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமைக்கு அமைய பதவியை வறிதாக்கிச் செல்லும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறாது எஞ்சியுள்ள காலத்துக்கு மாத்திரம் அப்பதவியை வகிப்பதற்கு பாராளுமன்றத்தினால் அதிலுள்ள உறுப்பினர்களில் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதி உள்ள ஒருவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இதன்போது இந்தத் தெரிவு 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைப் பின்பற்றியதாக அமைந்திருக்கும்.

விசேடமாக இந்த நடைமுறை பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன், வாக்கெடுப்பின் போது சபாநாயகரும் வாக்களிப்பார். அத்துடன் இந்த நடைமுறைகளுக்காக பாராளுமன்றம் மூன்று நாட்கள் கூடும்.

அதன்படி, சட்ட விதிகளுக்கு உட்பட்டதாக இந்தத் தேர்தலை நடத்துவதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதில் ஜனாதிபதிப் பதவி வெற்றிடமான திகதிக்குப் பின்னர் இயன்றளவு விரைவாகவும், எச்சந்தர்ப்பத்திலும் அத்திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிந்தாமலும் இந்தத் தெரிவு நடாத்தப்படுதல் வேண்டும்.

இதற்கமைய இந்த வெற்றிடம் ஏற்பட்டு மூன்று நாட்களுக்குள்ளாகப் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைப்பதாகச் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் அத்தகைய கூட்டத்துக்கு என நிர்ணயிக்கப்படும் திகதியையும், நேரத்தையும் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு பாராளுமன்றம் கூடும்போது ஜனாதிபதிப் பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளது எனச் செயலாளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். இதற்கமைய நியமனங்கள் அவரால் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான திகதியையும் நேரத்தையும் அவர் நிர்ணயிப்பதுடன், கூட்டத் திகதியிலிருந்து 48 மணித்தியாலங்களுக்கு முந்தாததும், ஏழு நாட்களுக்குப் பிந்தாததுமான ஒரு திகதியாக அது இருக்க வேண்டும்.

நியமனங்கள் பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று பாராளுமன்றம் கூடவேண்டும் என்பதுடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராகவும் செயலாற்றுவார். ஜனாதிபதிப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கென எவரேனும் உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்பும் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் எந்த உறுப்பினரின் பெயரை முன்மொழிய விரும்பகிறாரோ, அந்த உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஜனாதிபதி பதவியில் அவர் சேவை



செய்ய விருப்புடையவராகவுள்ளார் எனக் கூறும் எழுத்திலான சம்மதத்தை அத்தகைய உறுப்பினரிடமிருந்து முன்னர் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு சம்மதத்தைத் தெரிவித்த உறுப்பினர்கள் அன்றையதினம் பாராளுமன்றத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

இங்கு ஜனாதிபதிப் பதவிக்கு உறுப்பினர் ஒருவரின் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டிருந்தால் அவர் அந்தகைய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென செயலாளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு இருப்பின் வாக்கெடுப்பை நடத்துவதற்கான திகதியும், நேரமும் பாராளுமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட வேண்டும், அத்தகைய திகதி நியமனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாத ஒரு திகதியாக இருக்க வேண்டும்.

வாக்கெடுப்பை நடத்துவதற்கென நிர்யணிக்கப்பட்ட திகதியன்று செயலாளர் நாயகமே தெரிவத்தாட்சி அலுவராகச் செயற்படுவதுடன், வாக்களிப்புத் தொடங்குவதற்கு முன்னர் வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டியை உறுப்பினர்களுக்குக் காண்பித்து அவர்கள் முன்னிலையில் இலச்சினையிடல் வேண்டும். இதற்கமைய வாக்களிப்புத் தொடங்கியவுடன் தெரிவத்தாட்சி அலுவலராகப் பணியாற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சபாநாயகர் உள்ளிட்ட ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயரையும் அழைத்தல் வேண்டும். அவ்வாறு அழைக்கப்படும் போது உறுப்பினர்கள் தெரிவத்தாட்சி அலுவலரின் மேசைக்குச் சென்று வாக்குச்சீட்டொன்றைப் பெற்று தமது வாக்குகளை அடையாளமிட வேண்டும். அதன் பின்னர் தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.

உறுப்பினர் ஒருவர் வாக்குச்சீட்டொன்றினை தற்செயலாகப் பழுதாக்கினால், அதனை அவர் தெரிவத்தாட்சி அலுவலரிடம் திருப்பிக் கொடுத்து, தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தற்செயல் பற்றித் திருப்தியுற்றால் அவருக்கு வேறொரு வாக்குச்சீட்டைக் கொடுக்கலாம். பழுதாக்கப்பட்ட வாக்குச்சீட்டு தெரிவத்தாட்சி அலுவலரால் உடனடியாக இல்லாததாக்கப்படும். பெயர் கூப்பிடப்பட்டபோது வாக்களிக்காதிருந்த எவரேனும் உறுப்பினரின் பெயரை இரண்டாவது முறையாக அழைத்தல் வேண்டும். அவ்வாறு அழைக்கப்பட்ட பின்னரும் வாக்களிக்காதிருந்தால் அவர் வாக்களிக்காது ஒதுங்கியிருந்தவராகக் கருதப்படுவார்.

ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உரித்துடையதாக இருக்கும் என்பதுடன், எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கின்றாரோ அந்த வேட்பாளரின் பெயருக்கு எதிரேயுள்ள சதுரத்தில் '1' எனும் எண்ணை இடுதல் வேண்டும். பல வேட்பாளர்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் விருப்பத் தெரிவுகளை வழங்க முடியும். இதற்கமைய போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய பெயர்களுக்கு எதிரேயுள்ள சதுரங்களில் 2,3,எனும் விருப்பத் தெரிவுகளை வழங்க முடியும்.

இவ்வாறு வாக்களிப்பு இடம்பெற்ற பின்னர் வாக்கு எண்ணும் பணி முன்னெடுக்கப்படும். எவரேனும் வேட்பாளர் வாக்குகள் எண்ணப்படும் இடத்தில் சமுகமளிக்க விரும்பினால் அதற்கு வாய்ப்புக் கிடைக்கும் அல்லது அவரது பிரதிநிதியாகச் சமுகமளிப்பதற்கு வேறொரு உறுப்பினரை நியமிக்கவும் முடியும்.

அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளுள் அரைவாசிக்குக் கூடுதலான வாக்குகளைப் ஒரு வேட்பாளர் பெற்றுள்ளவிடத்து தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய வேட்பாளர் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை உடனடியாக அறிவிக்க வேண்டும்.

அதேநேரம், வேட்பாளர் எவரும் அளிக்கப்பட்ட செல்லபடியான வாக்குகளுள் அரைவாசிக்கும் கூடுதலான வாக்குகளைப் பெறாதவிடத்து இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தெரிவுகள் சரிபார்க்கப்படும். இதில் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கப்பட்டு அவருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது விருப்பத் தெரிவு எண்ணப்படும்.

வாக்கு எண்ணுகையின் முடிவில் வேட்பாளர் எவருமே செல்லுபடியான வாக்குகளுள் அரைவாசிக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றில்லாதவிடத்து அந்த எண்ணுகையின் போது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ள வேட்பாளர் ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை தெரிவத்தாட்சி அலுவலர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்.

அத்துடன், இரு வேட்பாளர்கள் அல்லது பலருக்கிடையிலான வாக்குகள் சரிசமமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் திருவுளச்சீட்டு போடப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'ஆசனம்' இல்லாமலே சிம்மாசனம் ஏறினார்



அழகன் கனகராசா



**இலங்கையைத் திரும்பி பார்க்கும் வகையில் பல சம்பவங்கள் கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வருகின்றன. அரசியலில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் வரலாற்றில் இடம்பிடிக்கும் வகையில் அமைந்துள்ளன. அந்தளவுக்கு மக்களின் போராட்டம், பலவற்றையும் மாற்றம் செய்துள்ளது.**

நமது நாட்டைப் பொறுத்தவரையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் தங்களுடைய காலத்தை நீடித்துக்கொள்ளும் வகையிலேயே காய்களை நகர்த்தியிருந்தனர். மூன்றாவது தவணைக்காக எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தமையும் வரலாறாகும்

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர் ஜயவர்தன 10 வருடங்களும், சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க 11 வருடங்களும், மஹிந்த ராஜபக்ஷ ஒன்பது வருடங்களும் ஜனாதிபதியாக ஆட்சி புரிந்தனர். எனினும், இறுதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இரண்டு வருடங்கள் மட்டுமே ஆட்சியில் இருந்தார்.

மக்களின் கடுமையான எதிர்ப்புக்கு ஈடுகொடுக்க முடியாமையால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய இராஜினாமா கடிதத்தை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு 2022 ஜூலை 14ஆம் திகதி இரவு அனுப்பியிருந்தார். அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர், "ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ இராஜினாமா செய்துள்ளார்" என, நேற்று (15) உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டைவிட்டு கடந்த 11 ஆம் திகதியன்று மாலைதீவுக்கு தப்பியோடியதை (தற்போது சிங்கபூரில் இருக்கின்றார்) அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பதில் ஜனாதிபதியாக அந்தப் பொறுப்புகளை முன்னெடுத்திருந்தார். கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய இராஜினாமா கடிதத்தை அனுப்பி வைத்ததன் பின்னர், சபாநாயகரின் உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று (15) வெளியானது.

அதனையடுத்து, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நேற்று (15) காலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி தேர்தலில் இரண்டு முறை போட்டியிட்டு தோல்வியடைந்தார். 1999 இல் சந்திரிகாவிடமும், 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவுடனும் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

அதன்பின்னர் நடைபெற்ற இரண்டு ஜனாதிபதி தேர்தலிகளிலும் தான் போட்டியிடாது பொது வேட்பாளரை களமிறங்கினார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து 2010 ஆம் ஆண்டு, இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவையும், 2015 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவையும் களமிறக்கினார்.

இதில், மைத்திரிபால சிறிசேன வெற்றியடைந்ததன் பின்னர், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாவிடினும் பிரதமராக பதவியேற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க, 100 நாள் வேலைத்திட்டத்தினை முன்வைத்து, அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டி, மீண்டும் பிரதமரானார்.

ஜனாதிபதியாக தான் போட்டியிடுவதற்கு கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களையும் விட்டுக்கொடுத்த ரணில் விக்கிரமசிங்க, மூன்றாவது சந்தர்ப்பமாக, 2019 ஆம் ஆண்டு கிடைத்த சந்தர்ப்பத்தை தனது கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவராக இருந்த சஜித் பிரேமதாஸவுக்கு விட்டுக்கொடுத்தார்.

அத்தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ தோல்வியடைந்தார். அதன்பின்னர் 2020.08.05 அன்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியும் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய கட்சியும் போட்டியிட்டது.

இதில், ஓர் ஆசனத்தையேனும் வெற்றிக்கொள்ளாது ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வியடைந்தது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, இரண்டாவதாக கூடுதலான ஆசனங்களைப் பெற்று எதிர்க்கட்சியாகியது.

எனினும், ஐக்கிய தேசிய கட்சிக்கு அந்தத் தேர்தலில் ஒரேயொரு தேசிய பட்டியல் ஆசனமே கிடைத்தது. அதுவும் நீண்ட நாள்களாக நிரப்பப்படாமல் வெற்றிடமாகவே இருந்தது. இறுதியில் அக்கட்சியின் செயற்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே நியமிக்கப்பட்டார்.

தனியோர் ஆளாக நின்று, அரசாங்கத்தின் விமர்சனத்துக்கு, எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதிலளித்து, தன்னை யாரென்று காட்டிக்கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, நெருக்கடி ஏற்படப்போவது தொடர்பில். ஆரூடமும் கூறிவந்தார்.

இந்நிலையில் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பொருட்களின் விலைகள் கிடுகிடுவென அதிகரித்தன. தாங்கிக்கொள்ள முடியாத மக்கள் வீதிக்கு இறங்கினர். ஆங்காங்கே போராட்டங்கள் வெடித்தன. 'கோட்டா கோ கம', 'மைனா கோ கம' உருவாகின. நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வெடித்தன.

இதனையடுத்து மே 09 ஆம் திகதியன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். அவரது வெற்றிடத்தை நிரப்புவதில் ஏற்பட்டிருந்த சிக்கலை தீர்ப்பதற்குள், பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார்.

எனினும், போராட்டங்கள் வலுப்பெற்றன. கோட்டா மட்டுமன்றி, ரணிலும் வெளியேறவேண்டுமென போராட்டக்காரர்களின் குரல்கள் ஓங்கி ஒலித்தன. இதற்கிடையில், ஜூலை 9 ஆம் திகதியன்று, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் உள்ளிட்டவற்றை போராட்டக்காரர்கள் கைப்பறிக்கொண்டனர்.

அதன்பின்னரே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜூலை 13 புதன்கிழமை இராஜினாமா செய்வதாக, ஜூலை 9 ஆம் திகதியே அறிவித்திருந்தார். எனினும் அவரது இராஜினாமா கடிதம், ஜூலை 14 ஆம் திகதியன்று இரவே கிடைத்தது. சபாநாயகர் உத்தியோகபூர்வமாக நேற்று (15) அறிவித்தார். நேற்றையதினமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பொதுத் தேர்தலில் ஓர் ஆசனத்தையுமே வெற்றிக்கொள்ளாது, தேசிய பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்கு நுழைந்த ரணில் விக்கிரமசிங்க, பிரதமராகி இன்று சிம்மாசனம் ஏற்றிருக்கின்றார். இதுவும் இலங்கை வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.



# அம்பா சொல்லுதல்



விஜயரத்தினம்
சரவணன்

“மீனைப்புடியுமண்ணன்
புடிக்குமண்ணன் தூண்டலையும்
தூண்டலையும் கம்பியையும்
அட, பாத்துக்கொள்ளும் அஞ்சலரே

வந்தாரை வாழவைக்கும்
சிங்கார முல்லைத்தீவு
முல்லைத்தீவு போயிப்பாரு
வலை வளைப்பைக் கேட்டுப்பாரு

கிழம கிழம தோழா...
விடிஞ்சாச் சனிக்கிழம
கரவலைய இழுத்தாத்தானே...
அந்த வல ஓடிவரும்...

கட்டி இழுக்கச்சொல்லி
கயிறு தந்தான் சம்மாட்டி...

சம்மாட்டி ஆய்ச்சிவாடி
அட, சங்கிலியாம் உன்னவிட்டு...

கொண்டையில பூவச்சூடி
கொண்டுபோறான் கொழும்பநாடி
கொழும்பில கூடாரமாம்,
கோப்பிக்கொட்ட யாவாரமாம்

மச்சாளோ மாம்பழமோ
அட மாமிபெத்த ஓவியமோ
வடிமச்சாள் பட்டுப்போல
நேற்று அவிச்ச புட்டுப்போல

மயக்கம் வருகுதடா
மாராவித் தென்னங்கள்ளு

கார் எண்டால் காருதில்ல
அவதியில மீண்டகஞ்சி

பம்பர் வந்து குண்டுபோட்டு
சாக, வந்து கூப்பன் தந்தான்
கூப்பன் அரிசிக் கஞ்சி
குடிக்க மனம் இல்லையடா

பச்சை பெனியன்காரா
காஞ்ச பாணும் தஞ்சமடா

வலகுறுகிக் கரைய வரும்
அட, வந்தது தூக்கு மரம்

அந்தியில காத்தடிக்க
கைவிளக்கு நூந்ததென்ன”











அம்பாசொல்லுதல் என்றால் என்ன?

‘அம்பா சொல்லுதல்’ நாட்டார் பாடல் வகைகளில் ஒன்றாகும்.

முன்னைய காலங்களில் கிராமப்புறங்களில் வாழ்ந்த மக்கள் பாடல்களைப் பாடி, தமது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

குறிப்பாக குழந்தைகளைத் தூங்கவைப்பதற்காக தாலாட்டுப்பாடல்கள், களைப்பின்றி தமது தொழில்களைச் செய்வதற்காக தொழில்பாடல்கள், இறுதி நிகழ்வுகளில் ஒப்பாரிப்பாடல்கள், வழிபாடுளின்போது வழிபாட்டுப்பாடல்கள், விளையாட்டின்போது விளையாட்டுப்பாடல்கள் என, இவற்றைப் போன்ற இன்னும் பல்வேறு பாடல் வகைகளும் நாட்டுப்புறப்பாடல்களில் அடங்குகின்றன.

‘அம்பா சொல்லுதல்’ என்பது தொழில் பாடல் வகையில் அடங்குகின்றது.
அதிலும் குறிப்பாக கடற்றொழிலில், கரைவலை இழுப்பவர்கள் தாம் களைப்பின்றி கரைவலை இழுக்கும் வேலையைச் செய்வதற்காக இவ்வாறான அம்பாப் பாடல்களைப் பாடுகின்றனர்.

இவ்வாறு பாடும் அம்பாப் பாடல்களில் மீனவர்களின் வலி, அவர்களுடைய வாழ்வியல், அவர்களுடைய கடந்தகால, நிகழ் கால, எதிர்கால செயற்பாடுகள், அவர்களுடைய உறவுமுறை, அவர்களின் உணவு முறை, அவர்களுடைய மகிழ்ச்சி, அவர்களுடைய ஊர்ச் சிறப்பு என, அனைத்தும் கலந்ததாகவே இந்த அம்பாப் பாடல் அமைகின்றது.

நவீன கரைவலைத் தொழிலால் வளக்கொழிந்துசெல்லும், அம்பா செல்லுதல் தற்போது நவீன தொழில் முறைகளால் பாரம்பரிய கரைவலை இழுக்கும் தொழில்களும் காணாமல் போகும் அபாயத்தை எட்டியுள்ளன.

அத்தோடு தற்போது உழவியந்திரத்தில் ‘விஞ்ச்’ பூட்டப்பட்டு நவீன தொழில் முறையில் கரைவலைத் தொழில் இடம்பெறுவதால், கடற்கரைகளைப் பாதுகாக்கின்ற இராவணன் மீசை முதலான, கடற்கரையோரத் தாவரங்கள் அழிகின்றன. இதனால் கடலரிப்பு முதலான அனர்த்தங்களும் ஏற்படும் அபாயங்களும் காணப்படுகின்றன.

அதுமாத்திரமின்றி இந்த நவீன தொழில்களின் வருகையால் காணாமல் போகும் அபாயத்தினை எட்டியிருப்பது பாரம்பரிய கரைவலை இழுப்புத் தொழில் மாத்திரமல்ல, பாரம்பரிய கரைவலை இழுப்புத் தொழிலின்போது பாடப்படுகின்ற இவ்வாறான அம்பாப் பாடல்களும் தற்போது வழக்கொழிந்து அழிவடையும் அபாயத்தினை எட்டியுள்ளன.

### 100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் ஆஸ்பத்திரியின் நன்கொடையால்

# நிலைத்து நிற்கும் ‘ஜெயம்’ மரபு









100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் ஆஸ்பத்திரியொன்று இலங்கை மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. நீர்கொழும்பு மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட பிரஜையான காலம் சென்ற ஜெயம் விஜயரட்ணத்தின் கொடைவள்ளல் மரபை பறைசாற்றும் வகையில் இந்த நன்கொடை அமைந்துள்ளது. இவர் நீர்கொழும்பின் முன்னாள் பிரதி மேயரும் கரையோரப் பிராந்தியத்தின் மூன்றாவது தலைமுறை வர்த்தகராகவும் மக்கள் பணியாற்றியவர்.

ஜெயம் விஜயரட்ணம் புற்றுநோய் பராமரிப்பு நிலையம் (JWCCC) தலைசிறந்த கட்டடக் கலை நிபுணர் அன்ஜலேந்திரனால் வடிவமைக்கப்பட்டு கீர்த்திமிக்க பொறியியலாளர் தீபால் விக்கிரமசிங்கவின் மேற்பார்வையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2013இல் தனது கணவர் மரணம் அடைந்ததை தொடர்ந்து திருமதி யோகேஸ்வரி விஜயரட்ணத்தால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு தற்போது உத்தியோகப்பூர்வமாக சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தொழில்சார் ஆதரவு மையங்களின் வலையமைப்பை செயற்படுத்தும், ஐக்கிய இராச்சியத்தின் தர்மஸ்தாபனமான மெகியின் (Maggie’s Centres) எண்ணக்கருவால் உந்தப்பட்டு அமைதியான சிநேகபூர்வ சூழலில் மக்களை ஒன்றிணைக்கும் வகையில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஜெயம் விஜயரட்ணம் நிலையம் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையான றாகமை ஆஸ்பத்திரிக்கு அண்மியதோர் இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஒளி, நிறம் என்பனவற்றை இயற்கையோடு இணைப்பதன் மூலம் மக்கள் சிறந்த உடல்நலனை உணரலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. மிக விசாலமான இடவசதி கொண்ட முற்றம், காற்றோட்டம் மிக்க வெளிப்பகுதி என்பன எவரையும் அமைதியாக வரவேற்கும் வகையில் அமைந்துள்ளது. ஓர் ஆஸ்பத்திரியின் சிகிச்சை பிரிவில் இருந்து விலகி நிற்கும் உணர்வை இது ஏற்படுத்துகின்றது.

சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டதை தொடர்ந்து முழுமையான பொருத்திகள் மற்றும் வசதிகளுடன் கூடிய JWCCC றாகமை ஆஸ்பத்திரியின் புற்றுநோய் பிரிவாகச் செயற்படும். றாகமை ஆஸ்பத்திரியில் உள்ள புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டொக்டர் சுஜீவ சியம்பலாப்பிட்டியவின் முழுப் பொறுப்பில் ஆஸ்பத்திரியின் புற்றுநோய் பிரிவாக இது செயற்படும்.

இந்த நிலையத்தின் பிரதான கட்டடம் 100 படுக்கைகளைக் கொண்டது. தாதிமார் மற்றும் ஊழியர்களுக்கான விடுதிகள் விரைவில் பூர்த்தி செய்யப்படவுள்ளன. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஓர் ஏக்கர் காணியில் அமைக்கப்பட்ட இந்நிலையம் ஆய்வுகூட வசதிகள், நோயாளர் ஸ்கிரீன் பிரிவு, அலுவலகம், டொக்டர்கள் மற்றும் தாதியர் ஓய்வு அறைகள், வழிபாட்டு அறை என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.


புற்றுநோய் விழிப்புணர்வு செயற்பாடுகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தக் கூடிய ஒரு கேட்போர் கூடம், மருந்தகம், மிகவும் அத்தியாவசியமாக - தேவைப்படுமிடத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுடன் ஒரு குடும்ப உறுப்பினர் தங்கியிருக்கக் கூடிய வசதி என்பனவும் எழில் மிக்க இயற்கை புடைசூழ இங்கு அமையப் பெற்றுள்ளது.

JWCCC நிலையத்தின் பராமரிப்புக்கு பொறுப்பாக ஜெயம் விஜயரட்ணம் நிதியம் செயற்படும். திருமதி யோகேஸ்வரி விஜயரட்ணம், கலாநிதி ராதிகா குமாரசுவாமி, காவன் ரட்ணாயக்க ஆகியோர் இந்நிதியத்தின் தர்மகர்த்தாக்களாக செயற்படுவர்.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் திருமதிவிஜயரட்ணம் தனது கணவரின் ஆசையை நிறைவேற்றி வைக்கின்றார். இந்தப் பிரதேசத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படும் மக்கள் மகரகமைக்கு சிகிச்சைக்காக சென்று வருவதில் எதிர்நோக்கும் கஷ்டங்களை நன்கு உணர்ந்திருந்த காலஞ்சென்ற விஜயரட்ணம், தனது பிரதேச மக்களுக்காக ஒரு புற்றுநோய் ஆஸ்பத்திரியை நிர்மாணிக்க வேண்டும் என்ற ஆசையைக் கொண்டிருந்தார். ஆனால் நீர்கொழும்பில் அதற்கு தேவையான போதிய இடவசதி இருக்கவில்லை. எனவே பொருத்தமான இடமாக றாகமை தெரிவு செய்யப்பட்டது.

ஜெயம் விஜயரட்ணம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோர் பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞானத் துறையில் பயின்றவர்கள். யோகேஸ்வரி லண்டன் BSc பட்டப்படிப்பை பூர்த்தி செய்து கொழும்பு பிஷப் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றியவர். ஜெயம் நீர்கொழும்பு நகரின் முன்னாள் மேயரான தனது தந்தையின் மரணம் காரணமாக பல்கலைக்கழக படிப்பை இடையில் கைவிட்டவர். அதன் பிறகு தேங்காய் துருவல் ஆலை ஒன்று உட்பட குடும்ப வர்த்தகத்தைப் பொறுப்பேற்றவர். அதன் பிறகு இலங்கையின் தேங்காய் துருவல் ஆலைகளின் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவராகவும் பதவி வகித்தவர். கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான அவர், அந்தக் கல்லூரியின் முதலாவது XV ரகர் அணிக்காக பிறட்பி ஷீல்ட் கிண்ணத்துக்காக அணித் தலைவர் காலஞ்சென்ற சி.வி. குணரட்ணவின் தலைமையில் விளையாடியவர்.

விஜயரட்ணம் குடும்பம் மூன்று தலைமுறைகளாக நீர்கொழும்பு பிரதேசத்தில் வசித்து வரும் பிரபலம்மிக்க குடும்பமாகும். இவர்கள் தமது வள்ளல் குணத்துக்கும் நன்கொடைக்கும் பேர்போனவர்கள். ஜெயம் விஜயரட்ணம் உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த தேவாலயங்கள், கோவில்கள், விகாரைகள் என்பனவற்றுக்கு பல்வேறு விதமான உதவிகளையும் செய்தவர். பலவருடங்களாக இங்குள்ள தஹம்பாசல் மாணவர்களுக்கு இலவச காலை உணவையும் இவர் வழங்கி வந்தார்.





விபுலமாமணி வி.ரி சகாதேவராஜா
(முன்னாள் தலைவர், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம், காரைதீவு)

## கலை, அறிவியல், மெய்ஞானம் மூன்றும் ஒருங்கிணையும் கல்வியே

# முழுமையான கல்வி

### சுவாமி விபுலாநந்தரின் 75ஆவது ஆண்டு மகாசமாதி தினம்




உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 75வது ஆண்டு மகாசமாதி தினம் எதிர்வரும் (19.07.2022- செவ்வாய்க்கிழமை)ஆகும்.
அடிகளார் 1892.03.27ஆம் திகதி இவ் அவனியில் அவதரித்து 1947.07.19ஆம் திகதி மகா சமாதி அடைந்தார்.
அதாவது அடிகளார் அவதரித்து 130 வருடங்களாகின்றன. மகாசமாதியடைந்து 75 வருடங்களாகின்றன. ஆக வாழ்ந்த காலம் 55 வருடங்கள்.
இந்த 75ஆவது ஆண்டு பவளவிழா அனுஸ்ட்டிப்புத்தொடர் இவ்வாரம்; ஆரம்பமாகி எதிர்வரும் 2023.07.19 வரை தொடரவிருக்கின்றது.
அடிகளாரின் 75ஆவது ஆண்டு மகாசமாதி நினைவு நிகழ்வுத் தொடர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (19)அவர் பிறந்த காரைதீவில் அவரது திருவுருவச்சிலை திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

காரைதீவில் அவர் பிறந்த இல்லத்தோடு ஒட்டியதாக அவர் நினைவாக எழுப்பப்பட்ட மணிமண்டபத்தை நிருமாணித்த பணிமன்றத்தினர் இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனின் அனுசரணையோடு காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய பிரதான வீதி சந்திக்கும் முச்சந்தியில் நிறுவிய மார்பளவிலான திருவுருவச்சிலை செவ்வாய்க்கிழமை (19) இ.கி.மிசனின் மட்டு. மாநில உதவிமேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாவால் திறந்துவைக்கப்பட இருக்கிறது.

இதுதவிர, இந்த 75ஆவது ஆண்டு காலப்பகுதியில் தமிழ்கூறுநல்லுலகெங்கும் பல சிலைகள் நிறுவப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் வாழும் காரைதீவை சேர்ந்த பரோபகாரி உதயசூரியன் நாகமணி குணரெத்தினம், காரைதீவில் நிறுவுவதற்கென இருபெரும் சிலைகளை தனது சொந்தச்செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார்.

அவர் மகாசமாதி அடைந்த ஜூலை 19 தினத்தை கௌரவிக்குமுகமாக இலங்கை அரசாங்கம் அகிலஇலங்கை தமிழ் மொழித்தின போட்டிகளின் இறுதி நாள் விழாவை நடத்திவருவது குறிப்பிடத்தக்கதாகும்.
மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள மகாசமாதி கல்லறையில் அவர் யாத்த பாடல் இன்றும் மிளர்ந்துகொண்டிருக்கிறது.
இன்றைய நன்நாளில் அப்பாடலின் விளக்கத்தை இன்றைய சந்ததிக்கு எடுத்தியம்புதல் பொருத்தமாகும்.


'வெள்ளை நிற மலிகையோ -விபுலானந்தர்
வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'

வள்ளலாம் இறைவன் திருவடிக்கு ஏற்ற மலரெது? வெள்ளை நிற மல்லிகையா? வேறெந்த பெரிய மலரா?
உத்தமனாம் இறைவன் திருவடிக்கு வேண்டிய மலர் வெள்ளை நிறப் பூவுமில்லை வேறெந்த மலருமில்லை. உள்ளமாம் தாமரையே அவன் வேண்டுவது.

'காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காபவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.'

மலர்ந்த தாமரையா? கழுநீர்ப்பூ மாலையா? பெரியவனாம் இறைவனுக்கு ஏற்ற மலரெது? மலர்ந்த மலருமில்லை. கழுநீர்ப்பூ மாலையும் இல்லை. அன்பினால் வணங்கும் கூப்பிய கைகளாம் காந்தள் மலரே அரசனாம் இறைவன் வேண்டுவது.

'பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவற்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல



Swami Vipulananda
சுவாமி விபுலானந்தர்
(1892 - 1947)
ஸ்தாபகர்: ராமகிருஷ்ண மிஷன், இலங்கை
Founder:Ramakrishna Mission, Sri Lanka

நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.'

பாடிக் கொண்டு வரும் வண்டுகள் விரும்பும் பொன்னிறக் கொன்றை மலரா? உலகத்தில் இல்லாமல் தேவர் உலகில் இருக்கும் கற்பக மலரா? வேண்டுதல் வேண்டாமை இல்லாததால் எந்த வித வருத்தமும் இல்லாத இறைவனுக்கு ஏற்ற மலரெது?
பாடும் வண்டுகள் விரும்பும் கொன்றையில்லை. பாரில் இல்லாத பூவுமில்லை. அவன் அருளை எண்ணிக் கண்ணீர் விடும் விழியெனும் நெய்தல் பூ தான் தலைவனாம் இறைவன் வேண்டுவது.
அடிகளார் ஆற்றிய அளப்பரிய பணிகளை இன்றும் தமிழ்கூறு நல்லுலகம் நினைவில் கொண்டிருக்கிறது.
இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் சிறந்து விளங்கிய காரணத்தால் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டவர் சுவாமி விபுலாநந்தர்.
அவர் பல்துறை சார்ந்த பேரறிஞர். ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பாளராக, முத்தமிழ் வித்தகராக விளங்கியவர் விபுலானந்தர். சமூகத் துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும் தமிழுக்காற்றிய சேவைகளும் அவரை என்றும் நினைவுகூரச் செய்வனவாகும்.
தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுகின்ற 'யாழ்நூல்' என்னும் பொக்கிசத்தைத் தரணிக்குத் தந்த சுவாமி விபுலானந்தர் கிழக்கிலங்கையின் காரைதீவில் 1892.-03-.27 அன்று சாமித்தம்பி-கண்ணம்மை தம்பதியருக்கு மகனாக 'தம்பிப்பிள்ளை' என்ற நாமத்தோடு அவதரித்தார்.
சிறுவயதில் நோய்வாய்ப்படவே கதிர்காம முருகனின் பெயராகிய 'மயில்வாகனன்' எனும் பெயரை பெற்றோர் சூட்டினர்.
பாரதியாரின் முற்போக்குக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அன்று பாரதியை அவமதித்தார்கள். அவரின் பாடல்களை வெறுத்தார்கள். அவற்றை இலக்கியமென்று ஏற்க மறுத்தார்கள். மக்களுக்குத் தெரியவராதபடி மறைத்தார்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் புறக்கணித்தார்கள். இத்தனை பேருக்கும் எதிராக பாரதியை மகாகவியாக படித்த மக்களிடையே உலவ விட்டவர் விபுலானந்த அடிகளார் என்பது பலருக்குத் தெரியாத விடயம்.
இன்று பாரதியாரைப் பற்றி ஆயிரக்கணக்கான நூல்கள் வந்து விட்டன. இலட்சக்கணக்கான கட்டுரைகள் எழுதப்பட்டு விட்டன.
விபுலானந்தர் தமிழ்நாட்டில் கால் ஊன்றாமல் இருந்திருந்தால் மகாகவி பாரதியாரை உலகம் காணாது இருந்திருக்கும். பாரதியின் தமிழ் வீணாக மடிந்திருக்கும். சுவாமி விபுலானந்தர் பல்கலைக்கழக மட்டத்திற்குப் பாரதியைக் கொண்டு சென்றதால் பாரதியின் திறமையை யாராலும் அழிக்க முடியவில்லை.
விபுலானந்த அடிகளின் தமிழ்ப் பணிகளிலே





இமயமென உயர்ந்து நிற்பவற்றிலே அவர் பாரதியாரின் பாடல்களுக்கு அங்கிகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தமையும் ஒன்றாகும்.
சங்க இலக்கியங்களுக்கு நிகராக எண்ணப்படுகின்ற 'கங்கையில் விடுத்த ஓலை' என்னும் அடிகளாரின் கவிதை மலரும் மற்றைய இனிமையான கவிதைகளும் எண்ணற்ற கட்டுரைகளும் இயற்றமிழுக்கு அவர் ஆற்றிய பணியினை இயம்பிக் கொண்டிருக்கின்றன.
சுவாமி விபுலானந்த அடிகள் மக்கள் எல்லோரையும் சமமாக மதித்தார்.கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்று நினைத்தார். தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்கு வழிசமைத்தார்.
ஆங்கிலக் கல்வியினை இவர் முதலில் கல்முனையிலுள்ள மெதடிஸ்ட் கல்லூரியிலும் பின்னர் மட்டக்களப்பிலுள்ள மைக்கேல் கல்லூரியிலும் கற்றார்.
இவர் 16வது வயதிலேயே கேம்பிரிட்ஜ் பரீட்சையில் சித்தியெய்தினார். 1916இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்விலும் வெற்றி பெற்று 'இலங்கையின் முதலாவது மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்' என்னும் பெருமையையும் பெற்றார். 1919இல் லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்.சி தேர்விலும் சித்தியடைந்தார்.
கொழும்பு அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன.
அதனால் 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார்.
மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாளரும் திருப்புகழ் சிவப்பிரகாசம், சிவஞான சித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 1925ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலானந்தர் 1928இல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார்.
மயில்வாகனனுக்கு சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சித்தானந்தரினால் பிரபோத சைதன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும் சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன. 1924இல் சென்னை சென்ற மயில்வாகனனார் இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து 'பிரபோத சைதன்யர்' என்னும் பெயர் பெற்றார். அதே ஆண்டு சித்திரைப் பௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு சுவாமி சிவானந்தரால் 'சுவாமி விபுலானந்தர்' என்னும் நாமம் சூட்டப் பெற்றார். கல்லடி உப்போடையில் விபுலானந்தர் தாம் அமைத்த பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் என நாமம் சூட்டியது தமது குருவின் ஞாபகார்த்தமாகவே.
'கலை, அறிவியல், மெய்ஞானம் மூன்றும் ஒருங்கிணையும் கல்வியே முழுமையான கல்வி' என்பது அடிகளாரின் கருத்தாகும்.
1925இல் இலங்கை திரும்பிய அடிகளார் கல்லடி உப்போடையில் சிவானந்தா வித்தியாலயமும் காரைதீவில் சாரதா மகளிர் கல்லூரியும் மற்றும் ஆதரவற்றோர் மாணவர், மாணவியர் இல்லங்களும் நிறுவி அளப்பெரிய கல்வித் தொண்டு செய்தார்.
பின்பு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தையும் திருகோணமலை இந்துக் கல்லூரியையும் இராமகிருஷ்ண சங்கத்தோடு இணைத்ததோடு நில்லாது மலையகத்திலும் பாடசாலைகள் அமைத்து சகலருக்கும் சிறந்த கல்வித் தொண்டாற்றினார். மேலும் இராமகிருஷ்ணமிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.
1931இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் 1943இல் இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி புரிந்தார்.
அத்தனை சிறப்போடு மொழியியல் விஞ்ஞானியாக, அறிவியல் கலைஞராக, ஆத்மிக ஞானியாக, ஆற்றல் மிகு பேராசிரியராக, இயற்றமிழ் வல்லுநராக, இசைத்தமிழ் ஆராய்ச்சியாளராக பல பணிகள் புரிந்தார். 1943ஆம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கிய போது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத் துறையில் எவ்வழியில் செல்ல வேண்டுமென்ற திட்டங்களை சுவாமி விபுலானந்தரே வகுத்தார்.
யாழ்நூல், மதங்கசூளாமணி, கணேச தோத்திரப் பஞ்சகம், குமர வேணவ மணிமாலை, நடராஜ வடிவம் என்பன அடிகளாரின் பிரதான நூல்களாகக் காணப்படுகின்றன. மேலும் இலக்கியம், இசை, சமயம், மொழியியல், கல்வி, அறிவியல் சம்பந்தமாக எண்ணிறைந்த கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டு தமிழுக்கும் கல்விக்கும் தொண்டாற்றியுள்ளார். மேலும் விவேகானந்த ஞானதீபம் சம்பாசனைகள் (1924) கருமயோகம் (1934) ஞான யோகம் (1934) நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை (1941) விவேகானந்தரின் பிரசங்கம் (1934) அறிவியல் சம்பந்தமான எந்திரவியல் (1933) கலைச்சொல்லாக்க மாநாட்டுத் தலைமையுரை (1936) கலைச் சொற்கள் வேதிநூல் (1938) மின்சார சாத்தி வரலாறு விஞ்ஞான தீபம் (1922) விஞ்ஞான தீபம்-மொழிபெயர்ப்பு முறை (1922) போன்ற நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.
அக்காலத்தில் தமிழகத்தில் எண்ணற்ற தமிழறிஞர்கள் இருந்தும் சங்கத் தமிழில் சிறந்தவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சாமிநாதையர், இலங்கையைச் சேர்ந்த விபுலானந்தர் மட்டுமே என்னும் புகழாரம் அடிகளாருக்கு மட்டுமல்ல இலங்கைத் தமிழருக்கும் பெருமை தேடித் தந்தது.
அப்படி ஈழம் முதல் பணி இமயம்வரை கொடி கட்டிய இசைத்தமிழனான அடிகளாரின் 75வது மகாசமாதி நினைவு ஆண்டுத்தொடர் உலகின் எட்டுத்திக்கிலும் புகழ்பரப்ப பரவலாக அனுஸ்ட்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது வேணவா.

# கட்சித் தலைவர்களே! காலத்தை சாப்பிட்டுவிடாதீர்கள்

சிங்கள-பௌத்த பெரும்பான்மையின மக்களின் வாக்குகளால் வென்றவன் நான், என 2019 நவம்பர் 16ஆம் திகதியன்று இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டி, ஜனாதிபதியாக அநுராதபுரம் ருவன்வெலிசேயவில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் உரையாற்றும் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தமை இன்னும் ஞாபகத்தில் இருக்கும்.

சிறுபான்மையின மக்களில் பலரும் அவருக்கு வாக்களித்திருந்தனர். எனினும், அவரது உரையின் சாராம்சம் சிறுபான்மையின மனங்களின் வடுவாய் பதிந்திருந்தது. அதன்பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் பெரும்பாலானவை சிறுபான்மையின மக்களுக்கு எதிரானதாகவே இருந்தன. அப்போதெல்லாம் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டிருந்தது.

உரிமைக்குரல்கள் எல்லாம் நசுக்கப்பட்டன. அமைச்சரவைக்குள் வழங்கப்பட்ட ஆலோசனைகள் எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு தனிவழியில் ஜனாதிபதி செல்கின்றார் என்ற குற்றசாட்டுகளும் முன்வைக்கப்பட்டன. தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றார் என்றனர். எனினும், நிறைவேற்று அதிகாரம் தன்னிடம் இருக்கிறது என்ற இறுமாப்பில் ஜனாதிபதி செயற்படுகின்றார் என்பது அவரது செயற்பாடுகளில் வெளிப்பட்டன.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்தவர்களில். அரைவாசிக்கு மேற்பட்ட பெரும்பான்மை இன மக்கள், அவருக்கு எதிராக வீதிகளுக்கு இறங்கி குரல்கொடுத்தமையால், இரண்டு வருடங்களில் தானாகவே இராஜினாமா செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது.

சாதாரணமாக விலகிச் செல்லவில்லை; தப்பியோடிவிட்டார். இது எதிர்க்கால தலைவர்களுக்கு ஒரு படிப்பினையாகும். அதேபோல, பாராளுமன்றத்தில் நேரத்தை வீணடிக்காது, உருப்படியான தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

கடந்த சில மாதங்களாக நாட்டு மக்கள் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருந்த நிலையில், பிரதி சபாநாயகர் தெரிவுக்காக இரகசிய வாக்கெடுப்பை நடத்தி, காலமும் பெருந் தொகையான நிதியும் வீணடிக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டமை அறிந்ததே. இதனிடையே, ஜனாதிபதி தெரிவுக்காக, எதிர்வரும் 20ஆம் திகதியன்று வாக்கெடுப்பு நடத்தப்படவிருக்கிறது. கட்சிகளுக்கு இடையில் போட்டிகள் இடம்பெறுவது வழமையானது. ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யவேண்டுமாயின் போட்டிகளை தவிர்க்கமுடியாது.

எனினும், இழுத்தடிப்புகளும் குழப்பங்களும் இன்றி, வாக்கெடுப்பை நடத்தி, புதிய ஜனாதிபதியை தெரிவு செய்து, நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு, கட்சித் தலைவர்களின் கைகளிலேயே உள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக எட்டு மணிநேரத்துக்கு மேல் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட கறைபடிந்த வரலாறும் இந்தப் பாராளுமன்றத்துக்கு உள்ளது. தற்போதைக்கு அரசியல் ஸ்திரத்தன்மையை பலரும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். உதவி, கடன் வழங்கும் சர்வதேச நிறுவனங்களும் ஸ்திரத்தன்மைக்கு வலியுறுத்தியிருக்கின்றன.

இந்நிலையில், காலத்தை சாப்பிட்டுவிடாது, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை பெற்றுக்கொடுப்பது, கட்சித்தலைவர்களின் கைகளிலேயே உள்ளன என்பதை வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தற்கொலைக்கு ஒப்பான முயற்சி

**லக்ஸ்மன்**

தற்கொலைக்கொப்பான முடிவினை மேற்கொள்வதற்கு யாருக்குத்தான் விருப்பம் வரும். அதற்காக கோட்டாபய ராஜபக்ஷவை பாராட்டத்தான்வேண்டும். எனக்கு வாக்களித்த மக்கள் என்னை ஐந்து வருடங்களுக்கு ஜனாதிபதியாக நியமித்தார்கள் என்று எகத்தாளமாகப் பேசிக் கொண்டிருந்தவர் நாட்டைவிட்டுத் தப்பியோடி, வேறு நாடு ஒன்றிலிருந்து தனது பதவி துறப்புக் கடிதத்தை அனுப்பிவைக்கிறார்.

அதே நேரத்தில் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியான நிலையில், சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, டளஸ் அழகபெரும என பெரும் நீண்ட பட்டியலும் இது போன்ற முயற்சிக்குத் தயாராகிவிட்டனர்.

மக்கள் எழுச்சி, போராட்டம், வன்முறைக் கலாசாரத்தின் மூலமாக தம்முடைய நாட்டின் ஜனாதிபதியையே தலைதெறிக்க ஓடச்செய்த நிலை, உலகில் பெரிதும் அரிதாகவே நடைபெற்றிருக்கிறது. இதில் உள்ள அச்சம் ஜனாதிபதியையே புறமுதுகிட்டு ஓடச்செய்தவர்களுக்கு மற்றைய தலைவர்களும் சர்வதேச அமைப்புகளும் எம்மாத்திரம் என்பதே.

நாட்டின் மக்கள் தொகையில் 69 லட்சம் மக்களின் வாக்கினைப் பெற்றேன்; அதுவும் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகள் என்ற இறுமாப்பு, கோட்டாபய ராஜபக்ஷவை நினைத்த விதத்திலெல்லாம் செயற்படத் தூண்டியது. அது அவரது குரல்வளையை நசுக்கும் அளவுக்கு வந்துவிடும் என்று அவர் எண்ணிப்பார்க்கவேயில்லை. இன்று ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்குதல் எதிர்காலத்தில் ஆட்சியாளர்களாக ஆட்சிக்கட்டிலில் ஏற நினைப்பவர்கள் அனைவருக்குமானதோர் ஆபாயச் சங்கொலியே.

அபிவிருத்தியடைந்துவரும் நாடாக நாமெல்லாம் கல்வி கற்கும் காலத்திலிருந்து இருக்கும் இலங்கை, தற்போது உலகின் பணவீக்க வீதம் அதிகம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்திலுள்ளது. இது இந்த அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்ற பட்டியலுக்கும் ஆபத்தை ஏற்படுத்தலாம். ஒரு போதுமில்லாதளவு அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஏற்றுமதி, இறக்குமதி குறைந்திருக்கிறது. ஆடம்பரப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருந்தாலும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு பெரும் நெருக்கடியாக மாறியிருக்கிறது. பொதுமக்கள் நடுத்தெருவில் வாழ்க்கையைக் கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. நம் பிள்ளைகளின் கல்வி போக்குவரத்தின்மையால் தடைப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கொவிட் பரவல் காரணமாக ஒரு வருடத்துக்கும் மேல் பாடசாலைகள் மூடப்பட்டன.

எதிர்கால சந்ததியினரின் கல்வியின் நிலை என்னவாகும் என்ற கவலை எல்லோருக்கும் தொற்றத் தொடங்கிவிட்டது. அதே போன்றுதான் சுகாதாரத்துறை, வங்கித் துறை, முதுலீட்டுத்துறை, உற்பத்தித்துறை குறிப்பாக விவசாயம் என அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

இலங்கையின் அரசியல் கட்டமைப்பையே பாரிய சிக்கலுக்குள்ளும் பாரிய மாற்றத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்தவேண்டிய கட்டாயத்துக்குள்ளும் தள்ளியிருக்கின்ற மக்கள் எழுச்சியானது சிறப்பானதாக பார்க்கப்பட்டாலும், மக்கள் எழுச்சிகளின் மட்டுப்பாடுகளை மறந்ததாகவே இருந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டும் இல்லாமலில்லை.

இலங்கையின் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆட்சிக் கட்டமைப்பின் குறைபாடும், பலவீனமான அரசியல் தலைவர்களின் உள்வருகையுமே காரணம். ஆனால் மீண்டும் மீண்டும் பலவீனமான அரசியல் தலைவர்களுக்கு இடமளிக்க முயல்வது எதிர்காலத்திலும் பாதகத்தினையே ஏற்படுத்தும்.

நடக்கவிருக்கின்ற தேர்தல்களில் இவ்வாறான பலவீனமான, நாட்டின் மீதான மேம்பாடான திட்டங்கள் இல்லாதவர்களை மக்கள் தேர்வு செய்யாதிருப்பதற்கு என்ன வழியென்றும் சிந்தித்தாகவேண்டும்.

பொருளாதார நெருக்கடியால் உருவான மக்கள் போராட்டம் வெற்றியளித்து வரும் நிலையில், என்று மாத்திரமே சொல்லிக்கொள்ளக்கூடிய அளவில்தான் காலிமுகத்திடல் போராட்டம் இருந்து கொண்டிருக்கிறது.

இந்த இடத்தில், ஆட்சி மாற்றத்துக்கு இடமளிக்கும் வகையில் போராட்டக்காரர்கள் நடந்துகொள்வதுடன், அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக நடைமுறைகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்ள வேண்டும் என அரசியல் தரப்பினரால் அழைப்புகள் விடுக்கப்படுகின்றன.

வெற்றியின் அடையாளங்களாக போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்ட ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், பிரதமரின் அலுவலகம் என்பன பார்க்கப்படுகின்றன. அவற்றை மீள ஒப்படைக்கும் செயற்பாட்டுக்கு போராட்டக்காரர்கள் இணங்கியிருக்கிறார்கள்.

இவ்வாறிருக்கையில்தான், ஒவ்வொரு கட்சிக்கும் இருக்கின்ற தர்மசங்கடம் எதிர்கால அரசியல் தீர்மானம் என்ற சில தினங்களுக்குள் எடுக்கவேண்டிய முக்கியத்துவம்மிக்க முடிவே. இது சாதாரணமானதொன்றல்ல; தீர்க்கமானதாக இருக்க வேண்டும். இப்போதைய நாட்டின் நிலையில் யார் நாட்டைக் கையேற்றாலும், வீழ்ந்து கிடக்கும் நாட்டைத் தூக்கி நிறுத்தவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. ஆனாலும், அது ஒரு சில தினங்களிலோ, சில மாதங்களிலோ சாத்தியப்பட்டுவிடப்போவதல்ல என்பது மாத்திரம் நிச்சயம். பல வருடங்கள் கூட ஆகலாம்.

இன்றைய நிலையில், பிரதமர் மற்றும் பதில் ஜனாதிபதி பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. இதனைத்தான் போராட்டக்காரர்களும் சொல்கிறார்கள். பல அரசியல் கட்சியினரும் கூறுகிறார்கள். ரணிலின் நலனுக்கு துணைபோகும் வகையில், மக்கள் ஆணை இல்லாத ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னிச்சையாக பதில் ஜனாதிபதியாக நியமித்தமை தவறாக வெளிப்படுத்தப்படுகிறது.

'கோட்டா வீட்டுக்குப் போ' என ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் முதலில் ஜனாதிபதி கோட்டாபயவை வெளியேற்றுவதைத் தவறவிட்டு, பிரதமராக இருந்த மஹிந்தவை வெளியேறச் செய்தது. அதற்குள் மாட்டிக் கொண்டவரே ரணில் விக்கிரமசிங்க. இப்போது ஜனாதிபதி வெளிநாட்டுக்குச் சென்று அங்கிருந்து தனது இராஜிநாமா கடிதத்தினை அனுப்பியிருக்கிறார்.

பொது மக்களைப் போராட்டத்திற்கு அழைத்த மிக முக்கியமான காரணியாக ஜனாதிபதியாக இருந்த கோட்டாபயவின் முடிவுகள் இருந்தன. ஆனால் அது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முழு அழிவுக்குக் காரணமாகிவிட்டது. மிகக் குறுகிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நாட்டின் அதியுச்ச ஆட்சிவரை கைப்பற்றிய கட்சி இன்று எதனையும் நகர்த்தமுடியாமல் அஸ்தமித்துவிட்டதென்றே சொல்லிக்கொள்ளமுடியும்.

நேற்று நடைபெற்றது, அல்லது இருந்தது இன்றிருக்குமா என்ற நிலைப்பாடே இலங்கையில் இருக்கிறது. இந்தக் கட்டுரை எழுதப்படும்வரை பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பிரதமருடைய பெயரைப் பரிந்துரைக்கும்படி அழைப்பு விடுத்திருந்தார். புதிய ஜனாதிபதி தெரிவுக்காக பாராளுமன்றம் இன்று கூட்டப்படவிருந்தது. சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவதில் பிரச்சினைகள் இருக்கவில்லை. ஆனால் சர்வகட்சி அரசாங்கத்துக்கான உடன்பாடு ஏற்படுமா என்பதுதான் பெரும் சந்தேகம்.

எது எவ்வாறாக இருந்தாலும், நாட்டின் சாபக்கேடு என்னவென்றால் நாடு தொடர்பான சரியான தீர்மானத்தை எடுக்க முடியாமலிருப்பவர்கள் நாட்டின் எதிர்காலம் பற்றியும் எதிர்கால ஜனாதிபதி பற்றியும் கருத்து வெளியிடுவதுதான். ஒருவர் மீது வெறுப்பிருந்தால் அவர் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் அவர் உதவமாட்டார் என்று ஒப்புவிப்பது தவறாகும்.

கடந்த நல்லாட்சி காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலக்கிவிட்டு மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன. அந்த நியமனத்தின் மூலம் அவர் சாதித்தது என்ன? ஒரு வகையில் சொன்னால் இப்போது நாடு மிக மோசமான நிலையை அடைவதற்கு அதுவும் ஒரு முக்கிய காரணம் தான். அந்த 52 நாள் சம்பவத்தினை எல்லோரும் மறந்து விட்டனர். வெறுமனே கோட்டபாய ஆட்சிக்கு வந்ததன் பின்னர்தான் இந்தப் பொருளாதாரப் பிரச்சினைக்கு அடிக்கல் வைக்கப்பட்டதாக நாம் எல்லோரும் சொல்லிக் கொள்கிறோம். நதிமூலம் ரிசி மூலம் தேடப்படவேண்டிய விடயமே இப்போதைய பொருளாதாரப் பிரச்சினையாகும்.

மக்களால் முன்வைக்கப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கான கட்டமைப்பு மாற்றம், அரசியலமைப்பின் புதிய வடிவம், கோட்பாடு ரீதியாக இருந்த ஜனநாயகத்தினை புதிய பாதையை நோக்கி நகர்த்துதல், நாட்டின் அரசியல் ரீதியான நடைமுறைகள், பரஸ்பர மரியாதை, பன்மைத்துவம், பெண்ணுரிமை, மத சகிப்புத்தன்மை, இனவாதம் அற்ற என்ற நீட்சியுடனான நாட்டின் உருவாக்கத்திற்கு புதிய ஆட்சி வழி சமைக்க வேண்டும்.

முக்கியமாக வடக்கு- கிழக்கு சிறுபான்மைத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறில்லையானால் மீளவும் வேறு வகையான போராட்டங்கள் வெடிக்கக்கூடிய வாய்ப்புகளே காணப்படுகின்றன.

இந்த இடத்தில், இலங்கையில் நடைபெற்று வரும் அனைத்து வகையான வன்முறைகளையும் கண்டித்திருக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், நீண்ட கால பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்காக அனைத்து தரப்பினரும் விரைந்து செயற்பட வேண்டும் என்று கோரிக்கையும் முன்வைத்திருக்கிறார். முக்கியமாக பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஜனநாயக நிர்வாகம், சிறந்த எதிர்காலத்திற்கான மக்களின் கோரிக்கைகளை ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் அமைதியான அதிகாரப் பரிமாற்றத்தின் மூலம் மாத்திரமே அடைய முடியும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.



## வாழ்வியல் தரிசனம்

காலம் வந்ததும் காலன் வருவான் என்று கூறுவதுண்டு. எவரும் தொடர்ந்து உலகில் வாழமுடியாது. இன்று இது எங்கள் உலகம். கண்ணை மூடினால், எதுவும் தெரியாது. இறப்பைப் பற்றிக் கலவரப்படுவதில் என்ன பிரயோசனம்?

மனிதன் கண்முன்னாலேயே மானிட வாழ்வின் நிலையாமை பற்றித் தெரியவில்லையா? எனினும் அநேகர் மமதை, அறியாமையால் வாழ்வு நிரந்தரம் என்று நம்புகின்றார்கள். சின்ன நோய் வந்தாலும் பயந்து போய் விடுகின்றார்கள்.

நோய் வந்தபின்னர்தான் கடவுள் ஞாபகமும் வந்துவிடுகின்றது. உயிர் போகக்கூடாது என்று எண்ணுபவர்கள், தொடர்ந்து எவ்வளவு காலமும் தங்கள் உயிர் தங்களை விட்டு ஏகக்கூடாது என எண்ணுவதே அறியாமை.

கடவுள் மரணத்தை மறுப்பதில்லை. ஆனால், அவர் காலன் அல்ல! புதிதுபுதிதாக உலகம் வளர, உருவாக மரணம் தேவைப்படுகின்றது. இந்த நிலை சாதாரணமானது என்பதை மனதில் நிறுத்துக! அச்சம் என்பது களிப்பிற்கு எதிரி.

எனவே, வாழும்வரை முழுமையாக வாழுங்கள். பயம், பலவீனம், சந்தேகங்களைக் களைக. ஒரு வினாடியையும் வீணாக்க வேண்டாம். என்றும் எப்போதும் துணிவுடன் வாழ்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கிராமங்களுக்கு அரிசியை வழங்குங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழக அரசாங்கத்தின் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்ட அரியை பிரதேச செயலகங்களுக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டு உள்ளதால் மாவட்டத்தின் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள், குறித்த அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்கள் கடந்த போர் காலங்கள் தொடக்கம் தற்போது வரை உதவிப் பொருட்களை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சென்று வழங்கிய நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக, பிரதேச செயலகங்கள் தமது பணிமனைக்கு வந்து உதவிப் பொருட்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்திருப்பதன் காரணமாக, ஏற்கெனவே கிராமங்களில் வறுமையான குடும்பங்கள் என அடையாளப் படுத்தப்பட்ட குடும்பங்களுக்கே தலா 10 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டு வரும் நிலையில், சில கிராமங்களில் 20 கிலோ மீற்றருக்கு அதிகமான தூரம் பயணம் செய்து அரிசியினை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் பல குடும்பங்கள் அரிசியினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் கிராம அலுவலர் ரீதியாக அரிசியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கிராமங்களில் வாழ்கின்ற குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–நடராசா கிருஸ்ணகுமார்

தலைதூக்கி ஆடிய மதவெறி

# தறிகெட்டு ஓட வைத்திருக்கிறது



ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com

கேளாக் கிறுக்கர்கள், பிசகு பிடித்த தலைவர்கள் கொஞ்சப் பேரால்தான் இந்த நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது. அதனால் நம் நாட்டுக்கு அவமானமும் தலைகுனிவும் போனஸாக கிடைக்கிறது. போதாக்குறைக்கு அற்ப நேர வன்முறையில் அகமகிழும் அற்பர்கள் கூட்டமும் சேர்ந்து, இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதனால், இலங்கையை வெளிநாட்டார் திரும்பிப் பார்க்காத அளவுக்கு நிலைமைகள் மாறியிருக்கிறது.

முன்னுக்குப் பின்முரணாகப் பேசுவதிலும் தீர்மானம் எடுப்பதிலும் குத்துக் கரணம் அடிப்பதிலும், நம் தலைவர்களைப்போல் நையாண்டிக்குரியவர்கள் உலகத்தில் வேறெங்கும் எவரும் இருக்க முடியாது.

முன்னதாக, இரசாயன உர விநியோகத் தடையை எந்த ஜாம்பவான்கள் எதிர்த்தாலும் எதிர்த்து நிற்பேன் என்று கூறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, பின்னர் உணவுப் பஞ்சம் ஏற்படப் போகிறது என எல்லாத் தரப்பும் எச்சரித்த பிறகு, அந்த விடயத்தில் தான் செய்தது பெரிய தவறு என்று சாதாரணமாகச் சொல்லிச் சமாளித்து விட்டார்.

முதல் நாள் நள்ளிரவு இரசாயன உரம் உட்பட நூற்றுக்கணக்கான உணவுப் பொருட்கள், தானியங்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டதாகக் கூறி, நள்ளிரவில் வெளியிடும் வர்த்தமானப் பத்திரிகையை சில நாள்கள் கழித்து இரத்துச் செய்கின்ற சமாச்சாரமும் நம் நாட்டுத் தலைவரால்தான் மேற்கொள்ளப்பட்டது. அதனால்தான் மஞ்சளுக்கு அத்தனை மவுசு ஏற்பட்டது.

இதேவேளை, ஜுலை 09ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்ட பின்னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ நாட்டில் இல்லை என்றும் அருகில் உள்ள நாடொன்றில் இருப்பதாகவும் புதன்கிழமை நாடு திரும்புவார் என்றும் பிபிசி செய்திச் சேவையிடம் கருத்துத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அவ்வாறு கூறி ஒரு மணி நேரத்திற்கு பின்னர் அதனை மறுத்து, தான் தவறுதலாக அவ்வாறு கூறிவிட்டதாகவும் ஜனாதிபதி நாட்டிலேயே இருப்பதாகவும் அறிவித்திருந்தார். இதை விட, நாட்டின் உயர்ந்த தலைவருக்கு வேறென்ன பிசகு இருக்க வேண்டியிருக்கிறது.

மேலும் இன்னொரு சம்பவம், கடந்த நவம்பர் 24ஆம் திகதி, ஜனாதிபதி தன்னை அழைத்து மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் என இந்திய பிரதமர் மோடி, தனக்கு அழுத்தம் தருவதாகவும் அதனால் அவ்வாறே செய்யுமாறும் தன்னிடம் ஜனாதிபதி தெரிவித்திருந்ததாக கோப் குழு விசாரணையில் ஆஜராகிய இலங்கை மின்சார சபையின் அப்போதைய தலைவர் எம்.எம்.சி பெர்னான்டோ கூறியிருந்தார்.

பின்னர், பல்வேறு மன நெருக்கடிகளில் இருந்தபடியால் அவ்வாறு கூறியதாகவும், தான் வெளியிட்ட அந்தக் கருத்து சரியல்ல என்றும் மறுநாள் தெரிவித்து, தனது பதவியையும் இராஜினாமச் செய்து விட்டுச் சென்று விட்டார்.



ஆளுக்கும் மூளைக்கும் சம்பந்தமில்லாமல் அடிக்கடி பிதற்றும் இப்படிப்பட்டவர்களைத்தான் நாம் தலைவர்களாகக் கொண்டிருப்பதில் இன்னமும் பெருமையடைந்து கொண்டிருக்கின்றோம்.

நாட்டைப் பிரதிநித்துவப்படுத்தும் 225 பேரில் 96 பேர் சாதாரண தரப் பரீட்சையில் கூட சித்தியடையாதவர்கள் என்பது, பெருமைப்பட முடியாத கூடுதல் தகவல். இவர்களை வைத்துக் கொண்டுதான், நாம் இந்த நாட்டை விஞ்ஞான அடிப்படையில் துரித வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லப் போகின்றோம் என்பதும் சிந்திக்க வேண்டியது.

குற்றவாளியெனக் கண்டு நீதிமன்றம் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கிய நபரைத்தான், நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்து முன்னாள் ஜனாதிபதி விடுவிக்க, பின்னால் வந்த மற்றைய ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்து அந்த நபரை 'ஒரு நாடு ஒரு நீதி' என்ற குழுவுக்குத் தலைவராக நியமித்தார் என்பதை, உலகம் கண் திறந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தது. இப்படி இலங்கையின் நன்மதிப்பை தாழ்ந்த நிலைக்குக் கொண்டு சென்ற பல சம்பவங்கள் இருக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, வேகம், விவேகத்தை அழித்து அறிவுக் கண்களை மறைத்து, வன்முறைகளை வரவேற்று நிற்கின்றது. மானத்தைக் காக்கப் புறப்பட்டு கடைசியில் கோவணத்தையும் இழந்த கதையாக, வெறுப்புக்குரிய ஆட்சிக்கு எதிரான போராட்டம் ஆகிவிடக் கூடாது. கருத்துகளோடு மோத வேண்டுமே தவிர, உயிர் உடமைகளுடன் அல்ல என்பதை வலியுறுத்துகிறார்கள் அஹிம்சை வழிச் செயற்பாட்டாளர்கள்.

வன்முறையைக் கையிலெடுத்து அகப்பட்டதை எரிப்பதிலும் வீடுகளைக் கொளுத்துவதிலும் சொத்துகளை அழிப்பதிலும் வீரமும்



வெற்றியுமிருப்பதாகத் தோன்றவில்லை. ஆத்திரம் மீண்டும் நம் தேசத்தை, அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு சென்று விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது சமீப போராட்டத்தின் சில நிகழ்வுகள்.

சண்டித்தன அரசியல் செய்ய இன்னொரு சாராருக்கு வழிசமைத்துக் கொடுத்து விடக் கூடாது. போராட்டம் வெற்றியாய் அமைய விவேகத்தோடு போராடுவதே சிறந்தது.

வீதிகளைக் கொளுத்த வேண்டியதில்லை; வீடுகளை எரிக்க வேண்டியதில்லை; கல்லெறிய வேண்டியதில்லை; மாற்றுக் கருத்துக் கொண்டோரை மிரட்ட வேண்டியதில்லை; வாகனங்களைச் சேதப்படுத்த வேண்டியதில்லை.இவற்றைச் செய்வதில்லை என சத்திய உறுதிமொழி எடுத்து விட்டு இனங்கள் இணைந்து உணர்வுகளோடு ஒன்றிப்போன ஓர்மமான (மன உறுதியான) போராட்டம்தான் தொடர்ந்து நமக்குத் தேவை.

வன்முறை என்பதை கையில் எடுத்துக் கொண்டால் அது நம் நோக்கத்தைச் சிதைத்து விடும். ஏன் எதற்கு என்றில்லாமல் சில பல விரும்பத் தகாத காரியங்கள் சங்கிலித் தொடர்போல நடந்தேறியிருக்கின்றன.

இது சோகத்தில் துவண்டு போய் நிற்கும் நம் தேசத்து மக்களுக்கு உகந்ததல்ல. சடுதியான வன்முறைகள் சில பித்தர்களுக்கு கிளுகிளுப்பாய், குதூகலமாய் இருக்கலாம். ஆனால், தூர நோக்கில் சிந்தித்தால், துவம்சம் செய்தவை, அரைவேக்காட்டு அழிவுகள் என்று புரியவரும். தீ வைப்பும் கல்லெறித் தாக்குதலும் டயர் எரிப்பும் என்று நீதிக்காகப் போராடுவதாகக் கூறிக் கொண்டு, தீவிரவாதத்தை நிறைவேற்றியிருக்கின்றோமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எதற்காக வீதிக்கு வந்தோம், எதற்காக 'பெனர்' பிடித்தோம் என்று கூடத் தெரியாமல் இன்னொரு சாரார் கூச்சல் குழப்பத்தோடு எகிறிக் குதித்து நிற்கிறார்கள். இதில் ஆண்களும் பெண்களும் இளவயதினரும் மூத்தோரும் மொத்தமாய் அடக்கம். இந்தப் போராட்டங்கள் அர்த்த புஷ்டியாய் அமைந்து விட்டன என்று புகழ்ந்து பேசப்பட நாம் வழிசமைக்க வேண்டும்.உத்தமமான சிலராவது கூடி உணர்வு ரீதியாய், உருப்படியாய் ஏதாவது செய்தாலே போதும்.

அனைத்து சமூகத்தவரும் இணைந்து உணர்வாய், உருக்கமாய், உறுதியாய் நடத்தும் அமைதிப் போராட்டமே வெற்றி பெறும். இதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்களம், தமிழ், முஸ்லிம் என்றில்லாமல் நாட்டுக்கு நல்லதோர் ஐக்கியமாய் சங்கமிக்க வைத்திருக்கிறது, சீரழித்த ஆட்சிக்கெதிரான போராட்டம். சீரழித்தவர்களை சிதறடிக்க, சிந்திக்க வைத்திருக்கிறது. இது நமக்கெல்லாம் ஒரு பாடமாய் அமைய வேண்டும். ஆனாலும் நீதி வேண்டிப் போராடப் புறப்பட்ட நாம், ஆத்திர மேலீட்டால் நாமே அவஸ்தைப்பட்டுக் கொள்ளக் கூடாது.

எந்தச் செயலுக்கும் ஓர் எதிர்வினை உண்டென்பது விஞ்ஞானத்தின் விதி. அதையே மெய்ஞ்ஞானமும் வியந்துரைக்கிறது. ஒவ்வொரு வினைக்கும் ஓர் எதிர் வினை உண்டு. மனிதன் தன் இயல்பில், இயற்கை ஒழுங்கமைப்பில் இருந்து விலகி ஆட்டம் போட்டால், இயற்கை திருப்பி அடிக்கும். படைப்பில் ஏதாவது இயற்கைக் கட்டுப்பாட்டை மீறிப்போனால் இயற்கை அடக்கும்; அது நடக்கும்.

தலைதூக்கி ஆடிய மத வெறி அவர்களையே ஆட்டம் காண வைத்திருக்கிறது; விரட்டி அடித்திருக்கிறது. உலகமே பார்த்துக் கொண்டிருக்கும்போது மதவெறியைத் தூண்டி, இரத்தக் களரியை உருவாக்கி கொண்டாடி பட்டப்பகலில் மத வெறியால் வெற்றிக் களிப்பில் எகிறிக் குதித்தார்கள். இப்பொழுது அதே உலகமே பார்த்துக் கொண்டிருக்கும்போது, நள்ளிரவில் விரட்டியடிக்கப்படுகிறார்கள்; வெருண்டோடுகிறார்கள். கண்முன்னாலே நடக்கிறது. இது ஓர் அவலம்.

வரலாற்றில் எப்போதும் 'றிவேர்ஸ் கியரில்' போகமுடியாது. முன்னோக்கித்தான் போக வேண்டும். ஆனால், இங்கு தலைகீழாக எல்லாம் நடந்து வந்திருக்கின்றது. வரலாற்றில் எப்போதும் முன்னோக்கித்தான் பயணிக்க முடியும். பின் கண்ணாடியைப் பார்த்தபடியே வாகனத்தைச் செலுத்தினால் விபத்தில் சிக்கி அழிந்து விடுவாய் என்று கூறப்படுவதுண்டு. அதுபோலவே விபத்து நடந்திருக்கிறது. எந்த திசையில் இலங்கை பயணிக்கப்போகிறது என்பதை இனி அதிகாரத்திற்கு வருபவர்கள் சிந்திக்க வேண்டும்.

பிளவுபடுத்தல் என்பது நீங்கள் விரும்பிய இடத்தில் நிற்காது. அவிழ்த்துவிட்ட சக்திகளை ஒரு கட்டத்தில் அவிழ்த்து விட்டவர்களாலேயே கட்டுப்படுத்த முடியாமல் போய், அது அவர்களையே கட்டுப்படுத்தத் தொடங்கி விடும். அவர்கள் நினைக்கிற இடத்தில் அது நிற்காது. இலங்கையை அழிவிலிருந்து காப்பாற்ற மத இன மொழிவாதமற்ற சக்திகள் அணிதிரள வேண்டும். அது ஜனாதிபதி மாளிகையை சுற்றிப்பார்ப்பதோடும் ஆத்திர மேலீட்டால் அங்குள்ள சொத்துகளை அழித்து அசிங்கப்படுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடக் கூடாது.

# சான் ஏற முழம் சறுக்குது



வ.சக்திவேல்
shagthivel@gmail.com

'சான் ஏற முழம் சறுக்குவது' போன்றுதான் தற்போதைய நிலையில் மக்களின் வாழ்வு நகர்ந்து கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில் பல்வேறுபட்ட இன்னல்களுக்குள் சுழன்று தற்போது மெல்ல மெல்ல மீண்டெழுந்து கொண்டிருக்கின்ற இந்நிலையில் மீண்டும் பொருளாதாரச் சிக்கலுக்குள் அகப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

"நான் எனது வேலைகளை இலகுபடுத்துவதற்கு மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தியே வந்தேன். தற்போது எமது பகுதியிலும் நாட்டிலும் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்கள் இல்லை, இந்நிலையில் தற்கால பொருளாதார நெருக்கடியான இக்காலகட்டத்தில் நான் மீண்டும் பழையபடி சைக்கிளையே பயன்படுத்தத் தொடங்கி விட்டேன். ஒரு புறம் எனது உடல் ஆரோக்கியத்திற்கு இது உகந்தாக இருக்கின்றது. ஆனாலும் விரைவாக கடமைகளைச் செய்ய முடியாதுள்ளது.

"சைக்கிளைப் பயன்படுத்தி வருவதனால் எனது தொழிலுக்கும் குடும்ப கடமைகளை மேற்கொள்வதற்கும். மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றேன். இதனால் காலதாமதங்கள், நேரம் என்பன வீணாக விரையமாகிக் கொண்டிருக்கின்றன. இதனால் எமது வாழ்வில் இது பாரிய தாக்கத்தைச் செலுத்தும் என்பதை நினைத்து பெரும் வேதனையாகவுள்ளது. என்னைப் போன்று மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். இதனைக் கருத்திற் கொண்டு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் எரிபொருள், எரிவாயு, உர வினியோகம், உள்ளிட்டவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு தகுந்த தீர்க்கமான முடிவுகளைப் எடுக்க வேண்டும். இதற்காக வேண்டி மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் நாட்டில் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு முன்னிற்க வேண்டும். மக்களின் நிலமையைக் கருத்திற் கொண்டு அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்கு வழங்கி,, நாடாளுமன்றத்தை அதிக வலிமை மிக்கதாக மாற்றியமைக்க முன்வர வேண்டும். வலிமை மிகக் நாடாளுமன்றம்தான் தற்கால சூழலில் நாட்டுக்குத் தேவையான ஒன்றாகவுள்ளது. அவ்வாறு அமையப்பெறும் பட்சத்திலேயே சர்வதேச நாணைய நிதியமும் அதுசார்ந்த ஏனைய அமைப்புக்களும் சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு வந்து சமூகப்பணிகளையும், மக்களுக்குத் தேவையான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கும். இதற்கு ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அனைவரும், ஒத்துழைப்பு வழங்கி செயற்பட்டால்தான் நாங்கள் சைக்கிளில் இருந்து மீண்டும் மோட்டார் சைக்கிள் ஓடுவதுக்குரிய காலம் கனிந்து வரும்" என களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த வர்த்தகரான ரகுநாதன் தெரிவிக்கின்றார்.



"நாம் தற்போதை நிலையில் பெற்றோல், டீசல், எரிவாயு, உரம், உள்ளிட்ட பொருட்கள் இல்லாமலும், மருந்துகள், அன்றாடம் பாவிக்கும் பொருட்கள் உள்ளிட்ட அனைத்தும் அதிக விலையேற்றத்தாலும் விதைத்த நெல்லை அறுவடை செய்வதற்கு முடியாத நிலையிலும், மக்கள் மிகுந்த இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். தற்போதைய அரசாங்கம் நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் அனைத்து விடயங்களும் மெல்ல சுமூகமான நிலையில் இயங்கி வந்தன. பின்னர் மெல்ல மெல்ல உரத்தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு ஏனைய பொருட்களின் தட்டுப்பாடுகள் என தட்டுப்பாடுகள் பெருகத் தொடங்கிவிட்டன. இதற்குரிய காரணங்கள் என்ன என்பதையும், இது ஒரு திட்டமிட்ட செயலா, அல்லது அரசாங்கம்தான் இதனை திட்டமிட்டு செய்கின்றதா என்பது தொடர்பிலும் ஆராய வேண்டும்.

"இலங்கையில் தனி ஒரு நபருக்காக நாடே தற்போது கொந்தழித்துப் போயுள்ளது. தற்போது சைக்கிளைப் பயன்படுத்தி வந்தாலும் எனக்கு அதிக தூரம் பயணிக்க முடியாமலுள்ளது. எனவே அரசாங்கமோ, எதிர்த்தரப்பு என யாராக இருந்தாலும், மக்களுக்காக சேவை செய்ய வேண்டுமாக இருந்தால் சுயநலம் இல்லாமல் பொதுநலமாக, தங்களுடைய செயற்பாடுகளை மாற்றியமைக்க வேண்டும்" என சமூக சேவகரும், விவசாயியுமான சிவலிங்கம் கூறுகின்றார்.



மக்கள் கடந்த காலத்தில் கால் நடையாகவும், மாடு, குதிரை வண்டிகளிலும், தமது போக்குவரத்துகளை







மேற்கொண்டு வந்திருந்தனர். பின்னர், சைக்கிள் அறிமுகமானதும் அதனைப் பயன்படுத்தி அதற்கே பழக்கப்பட்டு வந்தனர். இயற்கை உணவுகளையும் உண்டு வந்தனர். அப்போது மக்கள் மத்தியில் தற்போது காணப்படுகின்ற தொற்றா நோய்களும் ஏனைய வியாதிகளும் மிக மிக குறைவாகவே காணப்பட்டன. காலம் செல்லச் செல்ல நவீன யுகத்தில் மோட்டார் சைக்கிள், கார், வேன் உள்ளிட்ட இயந்திர வாகனங்கள் அறிமுகமாகத் தொடங்கியதும் மனிதன் மெல்ல மெல்ல இயற்கையிலிருந்து இயந்திர மயமாக்கலுக்கும் மாறத் தொடங்கிவிட்டான். மின்சாரமின்றி குப்பி விளக்குகளில் வாழ்ந்த மக்கள் மின்சாரத்திற்கும் விறகுகளைப் பயன்படுத்தி வந்த மக்கள் எரிவாயுவுக்கும் மாறிவிட்டனர். காலம் கரைபுரண்டோட மனிதனின் வாழ்வும் இயந்திர மயமானது.

எனினும் இலங்கை மக்கள் இயந்திர உலகில் தமது செயற்பாடுகளைக் கழித்து வருகின்ற இந்நிலையில் திடீரென இவ்வருடத்தில் இயற்கை உரம் நிறுத்தப்பட்டன. எரிபொருள், எரிவாயு, மின்சாரம், அனைத்தும் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் மீண்டும் பழையபடி மனக் கிலேசத்துடன், பழைய வாழ்விற்கு மாறுவதற்கு கடினமாக சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

வேளாண்மை செய்து அரிவாள் கொண்டு (தாக்கத்தி) மனிதர்களே அறுவடை செய்த காலம் மறைந்துபோய், இயந்திரத்தால் அறுவடை செய்யும் காலத்திற்கு மக்கள் மாறியுள்ளனர். மனிதவலு குறைவடைந்துள்ளன. இந்நிலையில் வேலைகளை இலகுவாக தற்காலத்தில் மனிதர்களாலோ, மாறாக இயந்திரங்களாலோ செய்து முடிக்க இயலாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதை மக்களிடையே பெரிதும், மனக் கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளன. எனவே மக்கள் தமது கடந்த காலங்களைப்போல், விறகு அடுப்புகளையும் சைக்கிளையும் பயன்படுத்தி தற்கால நவீன யுகத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டில் எவ்வாறு முன்கொண்டு செல்வது என்பது கேள்வியாகவே உள்ளதாக அங்கலாய்க்கின்றனர்.

மக்கள் ஒருபுறம் விறகு அடுப்புகளையும் சைக்கிள்களையும் பயன்படுத்தி வந்தாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை, எரிபொருள் தட்டப்பாடு, பொருட்களின் அதிக விலையேற்றம், எரிவாயுத் தட்டுப்பாடு, மருந்துகள் இன்மை உள்ளிட்ட அனைத்திற்கும் மிக மிக விரைவாக வினைத்திறனான முடிவுளை மேற்கொள்ள வேண்டிய காலத்தின் கட்டாயத்திற்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளது. எனவே மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமின்றி முழு இலங்கை மக்களும் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் தமது வாழ்வை கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதை கருத்திற் கொண்டு மக்களை நேசிக்கும் மக்கள் பிரதிநிதிகள், அனைவரும் ஒருமித்து செயற்பட்டு, குறைகளை நிவர்த்தி செய்யமுன்வர வேண்டும். அரச அதிகாரிகளும் வெநாடுகளின் தூதுவராலயங்களும் அரச சார்பற்ற அமைப்புகளும் திட்ட வரைபுகளை மேற்கொண்டு மக்களின் குறைகளை போக்குவதங்குரிய முன்நோக்கிய செயற்பாடுகளையும் முடுக்கிவிட வேண்டும்.



# புத்தகங்கள் வழங்கி வைப்பு

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, கந்தளாய் தொழிற்பயிற்சி நிலையத்தின் சிங்கள, தமிழ், முஸ்லிம் பயிலுனர்களின் நலன் கருதி, நூலகத்துக்கு நேற்றுமுன்தினம் (14) புத்தகங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடக ஒன்றியத்தின் பிரதிச் செயலாளர் எம்.எச்.யூசுப், இந்தப் புத்தகங்களை பயிற்சி நிலையத்தின் மையப் பணிப்பாளர், பயிற்சி சேவை அதிகாரி சுனில் ரத்நாயக்கவிடம் கையளித்தார்.

எப். முபாரக்



## நடிகமணி வி.வி. வைரமுத்துவின் 33ஆவது நினைவு தினம்

நடிகமணி வி.வி. வைரமுத்துவின் 33ஆவது நினைவு தினம், காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பினால் ஒழுங்கமைக்கப்பட்டு, அவரது சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வு அமைப்பினர் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில், நினைவுப் பேருரையை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியரும் புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாக பணிப்பாளருமான எஸ்.ரி. அருள்குமரன் ஆற்றியிருந்தார். நிகழ்வில் அரங்கவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

எஸ். குகன்



## ஊடகவியாளர் வடிவேல் சக்திவேல் எழுதிய

# பக்தி பாமாலை வெளியீடு















மட்டக்களப்பு மாவட்டம் களுமுந்தன்வெளி விநாயகர் கலைக் கழகத்தின் 36வது ஆண்டு நிறைவை முன்னிட்டு களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் மீது பாடலாசிரியரும், சிரேஸ் சுதந்திர ஊடகவியலாளருமான வடிவேல் சக்திவேல் எழுதிய பாமாலை இறுவெட்டு வெளியீட்டு விழா வியாழக்கிழமை (07.07.2022) களுமுந்தன்வெளி முத்துமாரியம்மன் முன்றில் இடம்பெற்றது.

குறித்த இறுவெட்டிற்கு கிழக்கிலங்கையின் புகழ்பூத்த நிஸ்கமானந்தராஜா டனூஷ்ஷியன் இசையமைத்துள்ளதுடன், இலங்கை வானொலி தேசிய கலைஞரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான கலைச்சுடர் வீ.பத்மசிறி, புகழ்பூத்த பாடகி செல்வி சுலக்ஷனி புவனேந்திரராசா ஆகியோர் இணைந்து பாடியுள்ளார்கள்.

களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் விநாயகர் கலைக்கழகத்தின் தலைவரும் ஆசிரியருமான மு.சவுந்தரராசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு ஆன்மீக அதிதியாக களுமுந்தன்வெளி மாணிக்கப் பிள்ளையார் மற்றும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயங்களின் பிரதம குரு சிவ ஸ்ரீ த.கு.திருச்செல்வம் குருக்கள் , பிரதம அதிதியாக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கட்புல தொழில்நுட்பத்துறையின் தலைவர் கலாநிதி சு.சிவரெத்தினம் , சிறப்பு அதிதிகளாக களுமுந்தன்வெளி கஜமுகன் வித்தியாலயத்தின் அதிபர் நா.ராமேஸ்வரன், களுதாவளை சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் தலைவர் ஞா.யோகநாதன், செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் தலைவர் யோகராஜா, முன்னாள் அதிபர் வீ.கோபாலபிள்ளை, கவிஞர் கதிரவன் இன்பராசா, கலைஞர்கள், இலக்கியவாதிகள், கிராம பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

விநாயகர் கலைக்கழகத்தின் உபதலைவரும் ஆசிரியருமான ந.தரணிதரனின் வரவேற்புரையினைத் தொடர்ந்து இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பிற்கான தலைவர் த.வசந்தராஜா இறுவெட்டை வெளியீட்டு வைத்தார்.

இறுவெட்டின் முதற் பிரதியை மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் ஆலோசகருமான தேசபந்து எம். செல்வராஜா பெற்றுக்கொண்டார்.

இறுவெட்டின் நயவுரையை கவிஞர் ம.ஜீவரெட்ணம் நிகழ்த்தியதுடன், ஏற்புரையை பாடலாசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான வ.சக்திவேல், நன்றியுரையை விநாயகர் கலைக்கழகத்தின் செயலாளர் யோ.கிவேதன் நிகழ்த்தியதுடன், நிகழ்ச்சி தொகுப்பை கலைக் கழகத்தின் ஆலோசகர் தெ.சிவபாதம் மேற்கொண்டார்.

படுவாங்கரைக்கு கடந்த யுத்த காலத்தில் இராணுவம் படை எடுப்பது வழக்கம் அவ்வாறு 10 தடவைகள் தந்தார்கள் என்றால் இந்த களுமுந்தன்வெளிக் கிராமத்திற்கு ஒரு தடவை, அதுவும் பட்டும் படாததுபோல்தான் வந்து செல்வார்கள். இதனை கவிஞர் இப்பாடலில் ‘கொள்ளைநோய் கோர யுத்தம் வந்தபோதும் கோ மகளே காத்து நின்றாய் முத்துமாரி’ என்ற வரிகளுடாக எடுத்தியம்பியுள்ளார் என இறுவெட்டின் கவிஞர் நயவுரையினை தொடர்ந்து கவிஞர் ம.ஜீவரெட்ணம் ஆசிரியர் தெரிவித்தார்.

இந்தப் பாடலில் சமூகப் பொறுப்பும் சமூகக்கடமையும் காணப்படுகின்றது. இந்தக் கவித்துவம் மிகவும் முக்கியமானது. இதுதான் கவிஞனுக்கும் தேவை என கிழக்கு பல்கலைக்கழத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கட்புல தொழில்நுட்பத்துறையின் தலைவர் கலாநிதிசு.சிவரெத்தினம் தெரிவித்தார்.

# அன்பின் வடிவத்தில்...

கிழக்கில் மலரும் சூரியன்
மேற்கில் மறைவதுண்டு கண்னே

பிறப்பில் தொடங்கும் வாழ்க்கை
இறப்பில் முடிவதுண்டு கண்ணே
நான் உன்மேல் வைத்த அன்பு
என் உயிரை தீயிட்டு மறையாது
எரித்தாலும் மறையாது
அது முடியாது

சிந்து நதி கரையோரம்
அசைந்தோடும் நீரினை கண்டேன்

மறை மொட்டு விடியலில்
மலர்வதை கண்டேன்
இரவு வானில் தனிமரமாய்
நிற்கும் நிலவை கண்டேன்
இவை அனைத்திலும்
ஒன்று மட்டும் தான் கண்டேன்
அது உந்தன் பூ முகம்

கூண்டு கிளி எப்போது
நான் வெளிசெல்வேன் என்று
ஏங்கித்தவித்து மீளுமோ
அது போல வஞ்சி மலர் கொடியின்
வாச முல்லை
உன் மனதை எப்போது குத்துமோ
அப்போது என்காதலை உணர்வாய்
கண்னே
பருவ காற்று உன் மனதை கொய்து
என்னிடம் பரிசாய் தந்ததடி பருவ மங்கை

நீ எனக்கு சொந்த மென்று
உன் பாசம் எனக்கு சொன்ன தடி
வஞ்சி யர்பாடும் புகழ் பரதனை
நோக்கி என் உள்ளம்
உன்னை மட்டுமே
பாடும் புகழ்


நாகேஸ் விக்னேஸ்வரன்
உடரதல்ல-நானுஓயா

## யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின்

# சர்வதேச ஆய்வு மாநாடு

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தால் வருடாந்தம் நடத்தப்படும் மாநாட்டின் ஏழாவது மாநாடு நேற்றுமுன்தினம் (14) முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

‘புதிய இயல்பில் மீள்தன்மைக்காக வணிகத்தை மாற்றுதல்’ (*Transforming Business for Resilience in New Normal*) என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில் ஆஸ்திரேலியாவின் சதேர்ண் குறொஸ் பல்கலைக் கழக தகவல் அமைப்புகள் முறைமைப் பேராசிரியர் தர்சனா செடெரா நிகழ்நிலை வாயிலாக முதன்மை உரையாற்றினார்.

இந்த நிகழ்வில், யாழ் பல்கலைக்கழகம் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ் நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கணக்கியல், நிதி, சந்தைப்படுத்தல், விநியோகச் சங்கிலி, முயற்சியாண்மையும் புதியன புனைதலும், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மனித வள முகாமைத்துவம், நிறுவன கற்கைகள், கற்றல் கலாசாரம் மற்றும் சமூகம் ஆகிய ஏழு உபபிரிவுகளின் கீழ் 43 ஆய்வுக் கட்டுரைகள் இந்த ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றுடன், மாணவர்களின் அறிவு மற்றும் ஆய்வுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மாணவர் ஆய்வு மாநாடும் இடம்பெற்றது. இம் மாநாட்டில் மாணவர்களால் ஆறு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 16 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.